ஆசிரியர்:
மு.கருணாநிதி

முரசொலி

—வார இதழ்—

முரசு 4 | 28-2-58 வெள்ளி | ஒலி 42

'கனவு' பலிக்குமா?



மலர்களின் மாநாடு



கற்பனை உரையாடல்

[ரோஜாவை விரும்பி அணியும் நேரு பண்டிதருக்கு ரோஜாவின் பண்பு இருக்கிறதா? நறுமணமுள்ள மலர்களிருந்தும் காகிதப்பூக்களுக்கு கிராக்கி இருந்து கொண்டேதான் இருக்கிறது! எனவே இவை பற்றி ஆராய உலகத்து மலர்களெல்லாம் ஒருங்கே கூடி, தங்களின் பெருமைகளைப் பற்றியும், வருங்காலத்திலே தங்களின் நிலை குறித்தும் விவாதிக்கின்றன. தலைமை தாங்கும் முல்லை—திராவிட நாட்டிலே தோன்றிய முல்லை—பேசுகிறது!......கேளுங்கள்!...]

முல்லை: அழகின் இலக்கணங்கள் அனைத்தும் பெற்றுள்ள அருமைத் தோழிகளே! தோழர்களே! திராவிடத்துப் பெருங்குடி மக்களே! எங்களுக்கு விரோதிகள் பலர் தோன்றிவிட்ட காரணத்தினாலும், நறுமணமற்ற காகிதப் பூக்களை நாடி மங்கைகள் செல்ல ஆரம்பித்து விட்டதாலும் இந்த அவசர மாநாடு கூட்டி எங்கள் பெருமைகளை உலகுக்கு அறிவிக்க வேண்டியதாயிற்று. எங்களை மறந்து காகிதப் பூவை நாடுபவர்கள் நல்வாழ்வு வாழ இயலுமா? நம்மால்தானே மங்கைகளுக்குப் பெருமை வந்தது! நம்மைத் தலையிலே சூடிக்கொண்டுதானே இவர்கள் ஆண்களை மயக்கி அடிமைப் படுத்தினார்கள்! நாம் இல்லாவிட்டால் அவர்கள் கூந்தல் மணக்குமோ? "ஏன் மணக்காது?" எனச் சிவபெருமான்போல நீங்களும் கூறிவிட்டு நக்கீரரிடம் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள்! நம்மை அடிக்கடிச் சூடும் உமையாளைப்பார்த்து அந்தப் பரமசிவனே ஏமாந்திருக்கிறுரென்றால் நம் பெருமையை நாமே எதற்குக் கூற வேண்டும்?

ஆனால், எல்லோரும் வாழ்க்கையில் நன்றியோடு வாழ்வதில்லை. நம்மால முன்னுக்கு வந்த இவர்கள் — நம்மால பெயரும் புகழும் அடைந்து சிறப்படைந்தவர்கள்— நன்றி கெட்ட தன்மையுடன் இன்று நடந்திடுதல் நன்றோ?

கல்லூரி மாணவிகள்தான் காகிதப்பூ விரும்பிகளாக இந்நாள் வரை இருக்கிறார்களென்றால், கிராமத்துப் பெண்கள் கூடவா நம்மை நிராகரிப்பது? அணுயுகத்தில் வாழ்ந்தாலும் சரி; திங்களுக்கும் புதனுக்கும் சென்றாலும் சரி: காகிதப் பூவைச் சூடிச் சென்று திராவிடத்துக்கே இழுக்கு தேடித் தராதீர்கள் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நேருவின் காதலியாம் ரோஜாவைப் பேச அழைக்கிறேன்.

ரோஜா: தலைவி முல்லை கூறியவைகளெல்லாம் முற்றிலும் உண்மையானவை. ஆனால், நம்மை விரும்பி அணியும் ஆயிரமாயிரம் மங்கைகள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். "நேருவின் காதலி" யென என்னை சிலர் கூறுகிறார்கள்! "நேரு" என்றால் "ரோஜா"—"ரோஜா" என்றால் நேரு என இனி அகராதியில் பொருள் எழுதினாலும் எழுதுவார்கள்!

நேரு ராஜா எங்களை விரும்பி அணிவதால் நாங்கள் பெருமைப் பட்டு கர்வமடைவதாகக் கருதவேண்டாம்! மலர்களின் பண்பு மென்மை! தொட்டால் துவண்டிடும் நாங்கள் முன் கோபக்காரரான நேருவை எப்படி விரும்ப இயலும்? சென்னைக்கு அவர் முன்பு வந்திருந்த போதுகூட ஒரு கல்லூரி மங்கை, தன் வீட்டிலே வளர்த்த செடியின் ரோஜா மலரைப் பிரதமருக்கு அன்பளிப்பாகத் தந்தாளாம். அதை வாங்கித் தன் நெஞ்சிலே அணிந்து கொண்டுதான், கோபக் கனல் கிளம்ப வசவு புராணங்களை தொடுத்தார். வாடி அங்கேயே வீழ்ந்தேன் நான். நேரு ராஜாவின் சினத்திற்குப் பலியாகும் ரோஜாக்களின் நிலையை எண்ணிப் பாரீர்! கொஞ்சமும் இரக்கமின்றி, நெஞ்சிலே ஈரமின்றி நடக்கும் துப்பாக்கிப் பிரயோகங்களுக்குத் தடை விதிக்காமலிருக்கிறார்! உலகுக்கு அகிம்சையை போதிக்கும் பஞ்சசீலப் பண்டிதர், இன்றைக்கும் "கொல்லும் படிச் சுடு!" என்றுதானே கட்டளையிடுகிறார்! மலரைச் சூடிடும் மன்னவருக்கு மலரின் தலையாய பண்பு இல்லையே!

மன்னர்களும் மங்கையர்களும் தான் நமக்கு அடிமையென்று எண்ண வேண்டாம்; கவிஞர்களும் — ஏன் — துறவிகளும் கூட நமக்கு அடிமைப்பட்டு வாழ்ந்திருக்கிறார்கள்! நம்மைச் சூழ்ந்து இன்னிசை எழுப்பி, தேனை உறிஞ்சி வாழும் வண்டினைப் போல, கவிஞர்களும் நம்மை அணுகிக் கவிகளை இயற்றி இன்னிசை பாடி இன்பமடைந்திருக்கிறார்கள்! நம்மைப் பற்றிப் பாடாத கவிஞர்களும் உண்டோ? காவியங்களில் வாழ்வதைப் போலவே ஓவியத்திலும் நாம் வாழ்கிறோம்! ஓவியர்களும் கவிஞர்களும் தான் நமக்கு நீண்ட ஆயுளை அளிக்கிறார்கள்! ஒரு நாள் பொழுதில் மலர்ந்து மடிந்திடும் நம்மை ஓராயிரம் ஆண்டுகள்கூட வாழவைக்க அவர்களால் இயலுமென்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

துறவறம் பூண்ட இளங்கோ அடிகள்கூட மலர்களின் கண் வீச்சிலே மயங்கியவர்தான்! காவிரியைப் பெண்ணாக்கி அவளுக்கு வித விதமான பூக்களை அணிவித்து, அவளோடு அவர் கைகோர்த்து ஆடிப் பாடி மகிழ்கிறார்!

"குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
மரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருத்தியும் செண்பக ஓங்கலும்..."

என்று அவர் பூக்களின் பெயர்களை மேலே மேலே அடுக்கிக் கொண்டே போகிறார்! அவர் கூறியுள்ளபூக்களை இன்று தேடிப் பிடித்தாலும் அகப்படாது! துறவிகள், கவிஞர்கள், கலைஞர்கள், ஓவியர்கள், மங்கையர்கள் யாவரையும் கவர்ந்த மலர்களின் இனம் நீடூழி வாழ்க வெனக் கூறி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

அல்லி: பாரியின் உள்ளத்திலே ஈகையை ஊட்டி, அவன் தேரையே நன்கொடையாகப் பெற்ற நமதருமை முல்லைத் தலைவியே! தோழிகளே! தோழர்களே!

காட்டுப்பற்று மிக்க நம் திராவிடத்து முல்லையை நான் உளமார வாழ்த்துகிறேன்!

நம் முல்லையை ஒரே ஒரு விதத்தில் மட்டும் திரு காமராசருக்கு ஒப்பிடலாம். அதே போல் பெரியார் ராமசாமி அவர்களையும் ஒரே ஒரு விதத்தில் மட்டும் பாரி வள்ளலுக்கு ஒப்பிடலாம். நம் 'காமராசர் முல்லை,' வாயைத் திறந்து, 'பெரியார் பாரி வள்ள'லிடம், ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை! ஆனால் 'பெரியார் பாரி' 'காமராசர் முல்லை'யின் குறையை அறிந்தார்! தன் தேரையே முல்லைக்கு ஈந்து விட்டு, பாரி, கால் நடையாக நடந்து சிறைக் கூடத்தை அடைந்திருக்கிறார்! 'காமராஜ் முல்லை'யே நன்றி மறந்து விட்டது! தேரினைக் கொடையாகப் பெற்றவுடன் தேரிலே ஏறிக் கொண்டு, பாரியைக் கீழே தள்ளி, அவர்மீது தன் தேரையும் செலுத்துகிறது! சிறையிலே பூட்டி, "தேரைக் கொடையாக ஈந்ததற்கு இதுதான் தக்க தண்டனை!" எனக்கூறி கை கொட்டிச் சிரிக்கிறது!

எனவே இதுபோன்ற நன்றி கெட்ட முல்லைகளும் நாட்டிலே இருக்கத்தான் இருக்கின்றன! ஆதலால் நம்மை மறந்து காகிதப் பூவை நாடும் காரிகைகளைக் குறித்து நாம் கோபப்படுவதிலே பொருளே இல்லை! நம்மை மறந்து நம்மை விட்டு விலகி நிற்கும் காகிதப்பூ விரும்பிகள், என்றாவது நம்மை நாடி வருவார்களென்பது உறுதி உறுதி! (கை தட்டல்)

ஒரு சில கவிஞர்கள் நம்முடைய அழகினை மட்டும் கண்டு மயங்குகிறார்கள்! வேறு சிலர் நம் நறுமணத்திற்காக மட்டும் நம்மை விரும்புகிறார்கள்! ஒரு சிலர் நம் நிறங்களைக் கண்டு நம்மீது காதல் கொள்கிறார்கள்! ஆனால் நம்மைக் குறை கூறிவிட்டுக் காகிதப் பூவை நாடி ஓடும் மங்கைகள் நம் பண்புகள் எதையுமே அறியாத பேதைகள்!

மேனாட்டுக் கவிஞரான வோர்ட்ஸ் வொர்த் ஒரு நாள் ஒரு ஏரியின் கரையிலே, மரங்களின் அடியிலே, தென்றலிலே ஆடி அசைந்து கொண்டிருக்கும் பொன்னிறமான மலர்களைக் கண்டார். வானகத்து விண்மீன்கள்போல் பரந்து கிடந்த அந்த மலர்களின் காட்சியைப் பார்த்துக் கொண்டே மெய் மறந்து நின்றார். அவர் உள்ளத்திலேயும் உணர்ச்சி பொங்கியது; கவிதை எழுந்

[தொடர்ச்சி பக்கம்—8]

விற்பனையாகின்றன!

* அழகு தமிழ்ப் பூக்காடு!
* அரசியல் விளக்க ஏடு!
* உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்!

மு. கருணாநிதியின்

உதய சூரியன்

விலை ரூ. 1—50

* உணர்ச்சி மிக்க காவியம்!
* உன்னதமான ஓவியம்!
* தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு!

பி. சி. கணேசன எழுதிய

எழுத்தாளன் காதலி (நாடகம்)

விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை, திருச்சி-8.

[தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 2, புதுக் காசு சேர்த்து அனுப்புக.]

வெள்ளி 28-2-58 சென்னை

ஏமாற்றுத் திட்டம்!

தேருக்கு அச்சுபோல் இந்திய உபகண்டத்தின் அரசாங்கத்தைத் தடையின்றி இயங்க வைக்கும் இரயில்வே இலாக்கா எந்த ஆண்டையும் போலவே இந்த ஆண்டும் நல்ல வருமானத்தைக் கொடுத்திருக்கிறது.

தொழில்கள் அரசாங்கத்தின் சொத்தாக இருப்பதை எதிர்ப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாதங்கள் அனைத்தையும் தவிடுபொடி செய்யும் அளவுக்கு இந்த உபகண்டத்துக்கு உதாரணமாக இருப்பது இரயில்வே இலாக்காதான்!

இரயில்கள் அரசாங்கத்தின் சொத்தாக; அரசாங்கத்தின் நிர்வாகத்தில இல்லாவிட்டால் எந்த வரியும் வசூலிக்கிற அளவுக்கு; யாருக்கும் அதிகத் தொந்திரவையும் பளுவையும் தராமல் கணிசமான வருமானத்தை இரயில்வே சம்பாதித்துக் கொடுக்க முடியாது.

இன்னும் சொல்லப்போனால் இரயில்வே பொதுச் சொத்தாக மாறியது; அதனால்தான் இந்தியப் பிரஜையென்று சொல்லக்கூடியவனது முதுகில் இன்னும் அதிகமான வரிச்சுமை ஏறவில்லை! அதனால்தான சில பண்டிதர்கள் இரயிலவேயை இந்திய அரசாங்கத்தின் 'காமதேனு' என்கிறார்கள்!

1958—59-ம் ஆண்டின் மொத்த வருமானம் 407·48 கோடியாக இருக்குமென்றும்; செலவினம் 308·14 கோடியாக இருக்குமென்றும்; அதனால் கிடைக்கப்போகிற உபரி வருமானம் 27·34 கோடி என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்!

நெருக்கடி காரணமாக ஒருமுறை விதிக்கப்பட்ட வரிகள் நெருக்கடி குறைந்ததும் மாறுவது என்பது எப்போதாவது நடக்கும் அதிசயச் செயலாகும்!

அதைப்போலவே சென்ற ஆண்டு உயர்த்தப்பட்ட இரயில்வே கட்டண விகிதங்கள் இந்த ஆண்டு குறைக்கப்படவில்லை.

ஆனால் அதே நேரம் வேதனை தரும் தகவல் ஒன்றையும் இரயில்வே அமைச்சர் அறிவித்திருக்கிறார். விரைவிலே சாமான் போக்கு வரத்துக் கட்டணம் ஓரளவு உயர்த்தப்படும்—என்று அமைச்சரது சொற்பொழிவு அறிவித்திருக்கிறது.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆழ்ந்து கவனிக்கும்போது வழக்கம் போலவே தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருப்பதை யாரும் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது.

இரயில்வே முன்னேற்றத்திற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் முறையே 180 கோடி ரூபாயும்; 235 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் உலக பாங்கிலிருந்து 42.84 கோடி ரூபாய் கடனும்; கொழும்புத் திட்டத்திலிருந்து கணிசமான அளவு உதவியும் கிடைக்கிறது.

இந்த அடிப்படையில் மின்சார இரயில் அமைப்புக்காக இரண்டாவது திட்டத்தின்படி 75 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் இந்த ஆண்டு 17 கோடி ரூபாய் செலவழிக்கப்போகிறார்கள்.

—அப்படி இருந்தும் சென்னையிலிருந்து விழுப்புரம்வரை மின்சார இரயில்களை ஓடவிடுவது என்கிற திட்டம் என்ன ஆயிற்று என்று நினைக்கிறீர்கள்?

வட நாட்டில் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் அமுலாக்குவதில் தடையாக இல்லாத காரணங்கள் தென்னாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்குவதில் மட்டும் குறுக்கிட்டுவிடுகின்றன!

வெளி நாட்டுச் செலாவணி சட்டுப்பாடு காரணமாக வட நாட்டுத் திட்டங்கள் அதிகம் சுருக்கப்படுவதில்லை; அல்லது நிராகரிக்கப்படுவதில்லை.

ஆனால் தென்னகத்தைப் பொறுத்தவரையிலோ திட்டங்கள் வளராததற்கும்; அமுலாக்கப்படாததற்கும் டெல்லி அமைச்சர்கள் அனைவரும் அந்தக் காரணத்தைத்தான் சுட்டிக் காட்டுகிறார்கள்!

ஆடமுடியாத நாட்டியக்காரி முற்றம் கோணல் என்பாள்!

தெற்கைப் புறக்கணிக்க வேண்டுமென்பதைத் தவிர வேறெந்த திட்டமும் இல்லாத வட நாட்டு ஆதிபத்தியக்காரர்கள் பணமில்லை—என்கிறார்கள்!

சென்னை-விழுப்புரம் மின்சார அமைப்பு பேச்சு இருந்த வேகத்தில் செயலாகாமற் போனதற்கு இந்தியச் செலாவணியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் காரணமாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்!

இதைப்போலவேதான் சேலம்-பெங்களூர் இருப்புப் பாதை அமைப்பும்! துவக்க வேலைகள் துல்லியமாக முடிவுற்றதாகப் பேசிப் பேசிக் காட்டினார்கள்!

—ஆனால் இந்த ஆண்டு அமுலாக்கப்படும் இருப்புப் பாதை அமைப்புகளில் இதைப்பற்றிய பேச்சே இல்லை!

அதுமட்டுமா?

மேலும் இருப்புப் பாதை அமைக்க ஐந்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன!

அவற்றிற்காக 3211 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன!

ஆனால் அந்த ஐந்தும் இங்கல்ல; வட நாட்டில்தான் என்பது தென்னாட்டு மக்களுக்கு ஆச்சரியமான செய்தி அல்லவெனினும் ஆயாசம் தரக்கூடிய செய்தியாகும்!

தென்னகத்து இரயில்வேக்கள் அப்படியொன்றும் குறைந்த வருமானம் தரக்கூடியவை அல்ல.

வேறெந்த வட நாட்டு இரயில்வேக்களையும்விட அதிகமாகத்தான் வருவாயை அள்ளிக் கொடுத்துக்கொண்டு வருகிறது!

—ஆனால் அதற்கு உரிய அளவு சலுகைகளும்; முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களும்; திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலிடமும் அளிக்கப்படவில்லை!

சேலம்—பெங்களூர் இருப்புப் பாதை அமைப்பு இந்த ஆண்டில் இடம் பெறவில்லை!

சென்னை-விழுப்புரம் மின்சார ரயில் அமைப்பு உடனடியாக நிறைவேற்றப்படவில்லை!

—இவற்றிற்கு என்ன காரணம்?

தென்னகம் இன்னும் 'விழிப்புரம்' செல்லவில்லை; 'உறக்கபுரி'யிலேயே ஆழ்ந்து கிடக்கிறது!

—இதைத்தான் நாம் காரணம் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்!

வேறு சிலர் இருக்கிறார்கள்; 'ஒரு அழகேசனாரை அனுப்பியிருந்தால் இப்படி நடந்திருக்குமா?'—என்று கேட்கிறார்கள்!

பாவம்; அவர்கள் அனைவரும் எவ்வளவுதான் தட்டி அழைத்தாலும் 'விழுப்புரம்' நோக்கி வரமுடியாதவர்கள்!

இங்கிருந்து ஒரு அழகேசன் அங்கு சென்று; அங்கேயேயிருந்தால்தான் இங்குள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படுமென்றால் அதைவிட இந்திய அரசிற்கு அவமானம் வேறென்ன இருக்கமுடியும்?

இரு குழந்தைகளும் பசியென்று அழும்போது; ஒரு குழந்தைக்கு மட்டும் அன்னமிட்டு; மற்றொன்றைப் பட்டினி போடுபவளை அன்னையென்று எப்படிக் கூறமுடியும்?

அதைப் போலத்தான் டெல்லி மத்திய அரசும்; தென்னகத்தைப் பொறுத்த வரையில் அது அன்னையல்ல; கொடுமையின் வடிவமாகவும்; சிறுமைத் தனத்தின் சின்னமாகவும் விளங்கும் சிற்றன்னையாகும்!

—இந்த உண்மையைத்தான் இந்த ஆண்டு இரயில்வேயின் வரவு செலவுத் திட்டம் மீண்டும் எடுத்துரைத்திருக்கிறது. ஃ

சிறுகதை

பூவும் நாரும்

முல்லை சக்தி

“அம்மா! கூடத்திலே பூவும், நாரும் வைத்திருக்கிறேன். அதைத் தொடுத்து ஆரமாக்கிக் கொடம்மா!” என்றாள் மீரா!

சாந்தநாயகியின் பழக்கப்பட்ட விரல்கள் பூவையும் நாரையும் இணைத்து ஆரமாக்கிக் கொண்டிருந்தன.

மீரா, சாந்தநாயகியின் செல்லக் கிளி—சிந்தை கவர்ந்த செல்வம்! அவள் வாழ்வு வளம் பெற்று, இன்புற்று வாழும் காட்சியைக் காண அந்தத் தாய் உள்ளம் ஏங்கியதில் தவறென்ன?

மீரா, பாவாடையும் சட்டையும் அணியும் சிறுமி அல்லவே; தாவணி அணியும் பருவப்பெண்! சிறுவயதில் பெற்றவர்களுக்குக் களி தீர்க்கும் மாமருந்தாகும் பெண் குழந்தைகள் பருவ மெருகடைந்ததும் தீராத தொல்லையாக — கவலையின் மொத்த உருவாகக் காட்சி அளிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ‘ஒருவன்’ கையில் ஒப்படைக்கும் வரையில் பெற்றோர்களின் கவலை தீருவதே இல்லை. அந்த நிலையில்தான் இருந்தார்கள் சாந்தநாயகியும்! அந்த அம்மாள்தான் என்ன செய்வார்கள்? பாவம், ‘அவர்’ இருந்தாலாவது சாந்தநாயகியின் பொறுப்பு சற்று குறைந்திருக்கும்!

அவர் ‘பரலோகம்’ போய் ஆண்டுகள் பத்தாகிவிட்டன. அனாதையாய்—ஆதரவற்ற நிலையில் — கண்ணீரை மட்டும் கொண்டிருந்த சாந்தநாயகியையும், மீராவையும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றான் சுரேஷ்! சுரேஷ் அவர்களுக்கு தூரத்து உறவு! தாய், தந்தையரை இழந்து தவித்துக் கொண்டிருந்த அவன், அத்தை முறை கொண்ட சாந்தநாயகியையும், மீராவையும் தன் வீட்டிற்கே அழைத்து வந்து விட்டான். அது மாத்திரமல்ல; எல்லா பொருப்பையும் அவர்களிடம் ஒப்படைத்திருந்தான். அவன் நினைவெல்லாம் அவன் தந்தையின் நினைவுச் சின்னமாக இருந்த வீணையின்மீதுதான்! அவன் நோக்கம்—ஆசை எல்லாம் வீணையின் நரம்புகளிலே இன்ப நாதத்தை எழுப்புவதிலேயே லயித்திருந்தது. தேடித் தேடி அலைந்து, வீணை வித்வான்களிடத்தில் ‘சிட்சை’ பெற்றான். கற்றது போதும்; இனி கேட்பவர் காது குளிர வேண்டும்; புகழ்ந்து போற்ற வேண்டும் என்ற தாகம் அவன் இதயத்தில். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று தான் பெற்றுள்ள ‘கலைஞானம் குவலயம் முழுவதும் எதிரொலிக்க வேண்டும்; இதனால் புகழாரங்கள் மலையென தன் காலடியில் குவிய வேண்டும் — என்பதே அவன் இதய ஆசை; வாழ்க்கையின் குறிக்கோள் எல்லாம்.

அதுமாத்திரமல்ல; சுரேஷின் தந்தையே வீணை வாசிப்பதில் வல்லவர். அவர் எழுப்பிய நாதம் கேட்போரின் காதையும், இதயத்தையும் தடவி சிலுசிலுப்பைத் தரக் கூடியது. ஆனால் அவரது நாதம் அவர் வீட்டின் நாற் சுவர்களைத் தாண்டிப் போகவில்லை அக்கம் பக்கத்திலுள்ளோர் ‘இதென்ன பூனையின் சண்டை’ என்று கையாண்டியும் செய்தார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? பாவம்; அவர்களுக்கிருந்த ‘ஞானம்’ அவ்வளவு! ஆகவே தந்தை தோற்ற இடத்தில், தான் வெற்றிபெற வேண்டும் என்று சுரேஷ் விரும்பினான். எண்ணியதைஎப்படியும்முடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டான். ஆனால் உண்மையான ‘கலை’யை ரசிக்க அவ்வட்டாரத்தில் ஆள் இல்லை. அக் குக்கிராமத்து மக்களுக்கெல்லாம், வயிற்றுக்கு உணவு தேடவே நேரம் போதாத போது. செவிக்கு உணவைப் பற்றி ஏன் கவலைகொள்ளப் போகிறார்கள்!

நாளுக்கு நாள் சுரேஷின் மனம் சஞ்சலமடைய ஆரம்பித்தது. தனது கலைத் தீபம் சுடர் விட்டுப் பிரகாசிக்காமல் அணைந்து விடுமோ என்ற கவலை நோய் அவனைப் பிடித்துக் கொண்டது. வாழ்க்கையையே பணயம் வைத்து அதில் வெற்றி பெறுவது என்ற முடிவிற்குத் துரத்தப்பட்ட அவன், குடும்பத்தைப் பற்றியும், அக் குடும்பத்தில் தொத்திக் கொண்ட குங்கும முகத்தழகியைப் பற்றியும். கவலை கொள்ளவில்லை. மீட்டாத வீணை தன் வீட்டிலே மின்வெட்டு சாயல் கொண்டு — தீட்டிய ஈட்டியின் கண்களோடு பவனி வந்து கொண்டிருந்த காட்சி அவன் கண்களுக்குத் தெரியவேயில்லை.

“பூவை பின்னிட்டியா அம்மா?...” என்று கேட்டுக் கொண்டே மீரா வந்தாள். நீண்டு தளதளவென பின்னப்பட்டிருக்க கூந்தலில், தொடுத்த ஆரத்தைச் சூட்டினாள் அத்தாய். மகளது அழகிலே பூரித்துபபோன அத்தாயின் இதயத்திலே இருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது. “உம்..பூவும் இருக்கிறது; நாரும் இருக்கிறது; ஆனால் தொடுத்துப் பார்க்க காலம்தான் வரவில்லை!” என்றார்கள் சாந்தநாயகி.

“என்னம்மா சொல்லுகிறாய்?” என்றாள் மீரா.

“எதையடி சொல்வேன், என் செல்வமே! உன் கழுத்திலே மூணு முடுச்சி விழறதைத்தான் சொல்றேன!”

“போம்மா” — சிணுங்கினாள் மீரா. அவளது ரோஜா கன்னங்கள் மேலும் சிவந்தன. ஒரு குறுநகை தவழ்ந்து ஓடியது அவளது அதரத்தில். தலையில் இருந்த முல்லைச் சரத்தைப பார்த்து ‘நீ என்னைவிட அழகோ’ எனக் கேட்டது வெண் முத்துப் பற்கள்!

“சுரேஷ் இதைப்பற்றி ஒன்றுமே பேசமாட்டேங்கிறானே! சதா வீணை...வீணை...! என்னதான் கொட்டியிருக்கிறதோ அதில்! இந்தப் பேசும் வீணையைப் பற்றி கவலைபபடமாட்டேங்கிறானே! அவனுக்கென்ன ஆண்பிள்ளை...எப்பொழுது வேண்டுமானாலும் மணம் செய்து கொள்ளலாம்... ஆனால் பெண்ணை அப்படி வைத்திருக்க முடியுமா? நீதான் உன் அத்தானைக் கேட்கிறதுதானே...?”

“போம்மா”— மேலும் சிணுங்கிற்று அந்த பேசும் சிலை.

“ஆமாண்டி அம்மா! போகத்தான் போறேன், காசிக்கோ... இராமேஸ்வரத்திற்கோ... உன்னை அவன் கையில் ஒப்படைத்து விட்டு! அதற்குள் என்னை அனுப்பி விடாதே!”

புள்ளிமான் போல் துள்ளி ஓடினாள் அத்துடியிடையாள். அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி கொப்பளித்தது. ஏதோ ஒரு சினிமா பாட்டை அவள் வாய் முணுமுணுத்தது.

●

“என்னைப் பார்! என் அழகைப் பார்! என் முந்தானையில் பதித்துள்ள வைரத்தைப் பார்!” என்று கூறுவதைப் போல வான மண்டலம் முழுவதும் விண் மீன்களைச் சிதற விட்டு நிலாப் பெண்ணாள் எழில் நடை போட்டுக் கொண்டிருந்தாள்.

உலகமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில். நட்சத்திரப் பந்தலுக்குக் கீழே அமர்ந்து. சுரேஷ் வீணையை மீட்டிக் கொண்டிருந்தான். இன்ப நாதம் தென்றலிலே தவழ்ந்து ஓடிக் கொண்டிருந்தது. அவனது நீண்ட விரல்கள் நரம்பை மேவி மேவி விளையாடி அது எழுப்பிய ஓசை, இசை வெள்ளமாகப் பிரவாகமெடுத்து ஓடியது. சுரேஷ் மெய் மறந்தான். கற்பனையின் உச்சாணிக் கொம்பில் அமர்ந்திருந்த அவன் சிறுகச் சிறுக இந்தப் பூவுலகிற்குத் திரும்பி வந்தான். வீணையின் நாதமும் சிறிது சிறிதாகக் குறைந்தது. அவன் கண்களும் திறந்தன. எதிரே மீரா அசையும் நிலவாக—இசை எழுப்பும் யாழாக நின்று கொண்டிருந்தாள்.

“என்ன மீரா, நீ கூட என் இசையைக் கேட்க வந்து விட்டாயே...!”

“இசையைக் கேட்க வரவில்லை; இசை எழுப்பும் எழிலரசரைக் காண வந்தேன்...!”

“என்ன? நான் அரசனா? எந்த நாட்டிற்கு...?”

“என் இதய நாட்டிற்கு...”

“வேண்டாம் மீரா, நான் உன் நாட்டின் காவற்காரனாக இருக்கிறேன்!”

“ஏன்?”

“அரசனாக இருந்தால் பல அலுவல்களில் உன்னைக் காப்பாற்றும் பொறுப்பை சரிவர கவனிக்க முடியாமல் போய்விடும்!”

“வேடிக்கையாகப் பேசி வேதனைத் தீயை மூட்டுகிறீர்கள் என் இதயத்தில்... என் இதயம் கதறுவது இந்த வீணையின் ஒலியில் உங்கள் காதுகளில் எங்கே விழப்போகிறது...!”

“என்ன வேண்டும் உனக்கு? வைரமாலையா? முத்தாரமா? கொள்ளேகால் சில்க்கா? காஞ்சி பட்டு வேண்டுமா? ‘நைலா’னா? ‘டிஷ்யூ’ வா?”

“அய்யோ, பாழும் உலகமே! உண்ண உணவோடு, உடுக்க உடையோடு பெண்ணின் வாழ்வு முடிந்து விடுகிறது என்று நினைக்கிறாயே! உள்ளம் என்று ஒன்று இருக்கிறது என்பது உலகத்தின் கண்களுக்குத் தெரிவதே இல்லையா?”

“புதிர் போடாதே, மீரா!”

“என் வாழ்வே ‘புதிரா’கி விட்டது...!”

“மீரா, மேலும் மேலும் குழப்பாதே என்னை! உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை!......விளக்கமாகச் சொல்!”

“அய்யோ! இதைவிட நான் எப்படி விளக்கமாகக் கூற முடியும்? வெட்கத்தை ஒதுக்கி வைத்து விடும் ‘இனம்’ அல்லவே நான்! என் இதயத்தின் துடிப்பு உங்கள் காதில் விழவில்லையா? பூ இருக்கிறது; நார் இருக்கிறது; அவை இரண்டும் ஆரமாக இணைய வேண்டுமென்ற ஆசையே இல்லையா?”

“மீரா, என்னை மன்னித்து விடு! இலட்சியத் தாகம் கொண்டுள்ள என்னை உன் சுயநலத்திற்காகப் பலியிட்டு விடாதே! என் இதயத்தில் கலாதேவி ஒருத்திக்குத்தான் இடமுண்டு!...”

“அவள் என்னைவிட உயர்ந்தவளா?”

“ஆம்; வையகத்தில் எல்லாவற்றையும்விட அவள்தான் எனக்கு உயர்ந்தவள்! அவளது பாதார விந்தங்களைத் தொழுவதுதான் என் வாழ்வின் குறிக்கோள்!”

“அப்படியென்றால் என்மேல் உங்களுக்கு அன்பில்லை; ஆசையில்லை; பாசமில்லை!”

“அன்பிருக்கிறது; ஆசையிருக்கிறது; பாசம் — நேசம் எல்லாமே இருக்கிறது! ஆனால் ‘காதல்’தான் இல்லை என்கிறேன்!”

“அய்யோ, அத்தான்! அதைவிட என்னை ‘செத்துப் போ’ என்று கூறியிருக்கலாமே! நான் உங்கள் மனைவியாவதற்கு அருகதையற்றவளா?”

“நான் அப்படிக் கூறவில்லையே! மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை என்கிறேன்...”

“உன்னையே மணந்து கொள்ளுகிறேன் — என்று ஒரு வார்த்தை கூறுங்கள்; காலமெல்லாம் காத்திருக்கிறேன்!”

“ஒரு இலட்சியப் பயணத்தில்—வேதனையும் சோதனையும் நிரம்பிய வாழ்க்கைப் பாதையில் நடைபோடும் நான் இத்தகைய வாக்குறுதியை எப்படி அளிக்க முடியும்? மன்னித்து விடு மீரா, மன்னித்து விடு! தவறான எண்ணத்தின்மீது நீ ஆசைக் கோட்டை கட்டிவிட்டாய்! அது உன் தவறு; அல்லது என் தவறு என்று நாம் விவாதிக்கத் தேவை இல்லை. என் வாழ்க்கையின் இலட்சியம்—என் கலைஞானம் வையகம் முழுவதும் ஜெகஜ்ஜோதியாய் பிரகாசிக்க வேண்டும் என்பதுதான்! அதைக் குடும்பப் பாரம் என்ற காற்றினால் அணைக்க விரும்பவில்லை என் நெஞ்சம்!”

“உங்கள் கலைத் தீபம் சுடர் விட்டுப் பிரகாசிக்க நான் தூண்டுகோலாக இருப்பேன்!”

[தொடர்ச்சி பக்கம்—9]

தேர்தல் கால மன்னர்!

"யார் ஆண்டால் என்ன? 'இராமன் ஆண்டால் என்ன—இராவணன் ஆண்டால் என்ன?' என்று சும்மாயிருந்து விடுவது தவறு.

"'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் சொன்னார் என்றால், எல்லோரும் எப்பொழுதுமே மன்னர்கள்தான் என்று நினைத்துக் கொள்ள முடியாது; ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் வரும் போது. ஓட்டுப் போடுகிற நேரத்தில்தான்—அதுவும் ஓட்டினை பெட்டியினுள்ளே போடுகிற அந்த இரு வினாடி வரைதான் எல்லோரும் மன்னர். எனவே, அவரவரும் தத்தம் கடமையைச் செய்தால் தான் அதற்கேற்ற சர்க்காரும் வரும். தேர்தலுக்குப் பிறகு எல்லோரும் மன்னரல்ல—குடிமக்கள் தான்.

—அறிஞர் அண்ணா

தமிழ் ஆட்சிமொழியானது யாரால்?

விளக்கம் தருகிறது, டெல்லி ஏடு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நுழைவிற்குப் பிறகு அதன் நடவடிக்கைகள் இந்திய உப கண்டத்தின் எல்லா அரசியல் வாதிகளையும்; இதர மொழி ஏடுகளின் கவனத்தையும் முன்னைவிட அதிகமாகக் கவர்ந்திருக்கிறது.

தேர்தலில் ஈடுபட்டால்தான் ஒருகட்சி அரசியலைப்பொறுத்த வரையில் பக்குவமடைந்த கட்சியாக முடியும்—என்ற பொருளில் அறிஞர் அண்ணா அவர்கள் திருச்சி மாநில மாநாட்டில் பேசியதைப்போல தி. மு. கழக வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் இந்தத் திருப்பம் தாயக விடுதலை வரலாற்றிலே முக்கியமானதொரு அத்தியாயத்தைத் துவக்கி வைத்திருக்கிறது.

பம்பாய் 'கரண்ட்' ஏடு சென்ற வாரம் 'நாம் தமிழர்' கட்சியை இணைத்து தென்னாட்டில் பிரிவினைத் தத்துவம் இரண்டு விதத்தில் தூண்டுதல் பெற்றிருப்பதாக எழுதிகிறது.

"நிதி — கல்வி அமைச்சரும்; சென்னை சட்ட சபையின் காங்கிரஸ் கட்சித் தலைவருமான சி. சுப்ரமணியம் கவர்னர் பேருரையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் திடீரென்று ஒரு தீர்க்கதரிசியைப்போல் வடிவம் கொண்டு இந்தியாவிலிருந்து சுதந்தரம் பெற்ற தனித் திராவிடஸ்தான் அமைவது என்பது வருங் காலத்தில் சாத்யமில்லாமலில்லை என்று குறிப்பிட்டார்."

—'கரண்ட்' ஏட்டின் நிருபர் இவ்வாறு கூறுகிறார்.

அவர் மேலும் எழுதுகிறார்:

இதில் 'விநோதம்' என்னவென்றால் அதற்கு முன்புதான் சுப்ரமணியம தி. மு. க. வின் பிரிவினைத் திட்டம் பற்றியும், அதன் தலைவர் சி. என். அண்ணாதுரை பற்றியும் கடுமையான தாக்குதல் நடத்தினார்.

அவரது தாக்குதலை வர்ணித்துவிட்டு; 'கரண்ட்' ஏடு மேலும் எழுதுகிறது:

"அசன் பிறகுதான் சுப்ரமணியம் தீர்க்கதரிசியானார். அவர் கூறினார்:

"நான் வருங் காலத்தில் தலையிட்டு திராவிடநாடு கிடைக்குமா கிடைக்காதா என்பதைப் பற்றி முடிவு சொல்ல முயற்சிக்கவில்லை. இருந்தாலும் இந்தத் தலைமுறையில் அது (திராவிட நாடு) கிடைக்காது என்கிற என்னுடைய நம்பிக்கையை மட்டும தெரிவித்துக் கொள்கிறேன்.

"அதனால் தி. மு. க. நமது மாநிலத்தின் முன்னேற்றப் பணிகளில் ஒத்துழைக்கவேண்டும்!"

—'இந்தத் தலைமுறையில் திராவிட நாடு சாத்தியமில்லை' என்கிற அந்தப் பகுதியை மட்டும் பெரிய எழுத்துக்களில் போட்டு;

"இந்தியாவிலிருந்து சுதந்தாம் பெற்ற திராவிட நாடு சாத்தியமில்லாமலில்லை!

—சென்னை அமைச்சர் கூற்று"

—என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்பு கொடுத்து, முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது, 'கரண்ட்' ஏடு!

இதைப் போலவே டெல்லியிலிருந்து வெளிவரும் 'தாட்' (சிந்தனை) என்கிற ஆங்கில ஏடு சென்னையில் பிரிவினைக் கொள்கை குருத்து விட்டு வளர்வதாக வரைந்திருக்கிறது.

அதனல் விளையும் அபாயங்கள் அநேகம் என்றும்; எதிர்ப்பை சமாளிப்பதற்காக வேண்டி அரசாங்கம் தனக்குப் பிடிக்காத பல விஷயங்களில் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறதென்றும்; அண்ணா அவர்கள் இந்திக்கு எதிர்ப்பாகவும்; ஆங்கிலத்துக்கு ஆதரவாகவும் மேடை ஏறி முழங்க ஆரம்பித்த பிறகுதான் அதைச் சமாளிப்பதற்காக பிராந்திய மொழியாகிய தமிழை அரசாங்க மொழியாகப் பிரகடனப்படுத்த நேர்ந்ததென்றும் — கருத்து தெரிவித்திருக்கிறது.

—இந்தக் கட்டுரைக்கு 'திராவிடஸ்தானின் விளைவுகள்' என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தி. மு. கழகத்தினல்தான் தமிழ் ஆட்சிமொழியாயிற்று— என டெல்லி ஏடு எழுதுகிறது! அதை மறைக்க முயலும் 'மண்டூகங்கள்' இப்போதாவது உண்மை நிலையைப் புரிந்து கொள்ளட்டும்! ●

பூமாலையோடு பலிவாங்கப்பட்டார்!



ஆட்டைப் பலி கொடுக்கும்போது அதற்குப் பன்னீர் தெளித்துப் பூமாலை கட்டுவார்கள்! 'கன'மாக இருந்த மாஜி அமைச்சர் டி. டி. கே. யின் கதியும் அப்படித்தான் ஆகிவிட்டது என்று சித்தரிக்கிறது 'சங்கர்ஸ் வீக்லி'யின் இந்தக் கேலிச் சித்திரம்!

6

கோயில் நிர்வாகி அவளைப் பார்த்து வெற்றிப் புன்னகை புரிந்தார். அவளும் சிரித்தாள். நிர்வாகி, கூடத்திலேயிருந்த பெரிய மரப் பெட்டியைத் திறந்தார். அதற்குள்ளே அழகான செல்லப் பெட்டியொன்றிருந்தது. அதிலேயிருந்து இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து மைனாவிடம் நீட்டினார்.

அவள் 'போதாது' என்பதுபோல் தலையசைத்தாள். நிர்வாகி மீண்டும் சென்று பெட்டியைத் திறந்தார். மைனா, எதிர்பார்த்த சமயம் கிடைத்து விட்டது. அருகேயிருந்த எண்ணெய் வழியும் குத்து விளக்கை அவசர அவசரமாகத் தூக்கினாள். தூக்கிய வேகத்தில் நிர்வாகியின் பிடரிமீது ஓங்கி அடித்தாள். நிர்வாகி "அய்யோ" என்று கத்திய சப்தம்கூட வெளியே கேட்கவில்லை. செத்தானா, பிழைத்தானா அந்தச் சண்டாளன் என்று அவள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடிவந்தாள். வீட்டு வாயிற் புறத்திலிருந்து வெறிக்கப் பார்த்தாள். பீதாம்பர பாகவதர் தன் பிரியத்துக்குரிய பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு தூரத்தில் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. பின்னாலேயே ஓடினாள். அவரோ திரும்பாமல் நடந்து கொண்டிருந்தார்.

ஓடியவள் ஏதோ ஒரு நினைவில் நின்றாள். அவரைப் பின்தொடர அவளுக்கு இஷ்டமில்லை. வெறிபிடித்தவள்போல எதிரேயுள்ள பரந்த வெளியை உற்று நோக்கினாள். உடம்பெல்லாம் எரிவது போலவும் உள்ளத்தில் தழலைக் கொட்டியது போலவும், உணர்ச்சி அவளை ஆட்டிப் படைத்தது. அவளாகவே "பாபி! பாபி!" என்று பெருமூச்சோடு கலந்து முணு முணுத்துக் கொண்டாள். வாழ்க்கை முகப்பில் எவ்வளவோ உற்சாகத்தோடு காலெடுத்து வைக்கிறோம் என்ற மகிழ்ச்சியில் கர்வத்தோடு நுழைந்த காரிகை, கசங்கிய மலராய்—கருகிய தளிராய் சூன்யமாகத் தோன்றும் எதிர்காலத்தை நீர் மல்கிய கண்களோடு வரவேற்க வேண்டிய நிலைபெற்று விட்டாள்.

இனி அவளுக்கு யார் துணை? தீச்சட்டி சிங்காரம்தானா? அவனிடம் சென்று எப்படித் தன் நிலையை விவரிப்பது? "கணவனை வெறுத்தேன். காதலனாய் உன்னைப் பெற்றேன். காமுகன் ஒருவனின் ஆசைக்கும் உடன்பட்டேன்" என்ற செய்தியை அவனிடம் போய்க் கூறுவதா? சே! சே! அதைவிட உயிரை விட்டு விடலாமே — அதுதான் சரியான முடிவு! ஆனால் சாவதற்குள் ஒருமுறை சிங்காரத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காதா? அவனைப் பார்த்த ஆறுதலுடனாவது சாகக் கூடாதா? அதற்கு வழி? அவள் தீர்மானம் செய்து விட்டாள், அவனைப் பார்த்தே தீருவதென்று!

சிற்றூர் நோக்கி அவள் கால்கள் நகர்ந்தன. கல்லும் முள்ளும் கரடு முரடான பாதையும் அவளை என்ன செய்யும்? சாவதற்கு முடிவு கட்டியாகி விட்டது—இனி இந்த சரீரம் என்ன ஆனால்தான் என்ன? முள் கிழித்துத் தோள்பட்டைப் பக்கம் ரத்தம் கசிகிறது. அதோ கோயில் நிர்வாகியின் பல் பட்டு அவள் கன்னத்திலே ரத்தம் கட்டியிருக்கிறது. முள் உண்டாக்கிய காயத்திலிருந்து கசியும் ரத்தத்தில் எகதக் களங்கமும் இல்லை. பிரசித்தி பெற்ற ரத்த ஆராய்ச்சி நிபுணர்கள் பரிசோதித்துப் பார்த்தாலும் அது தூய்மையான ரத்தமென்றே கூறுவர்.

ஆனால் வெளிப்படாமல் கன்னத்தில் கட்டிக் கொண்டிருக்கிறதே ரத்தம்—கோயில் நிர்வாகியின் பல்லால் ஏற்பட்ட வினை—அந்த ரத்தம் பயங்கரக் கிருமிகளை உற்பத்தி செய்யக்கூடிய சாக்கடைத் தண்ணீராக ஆகிவிட்டது. அதனால்தான் அவள் முள் கிழித்து ஒழுகும் குருதியைப்பற்றிக் கவலைப்படாமல் நடந்தாள்.

பூனையின் பாதத்தைவிட மிருதுவான அவள் பாதத்தில் பருக்கைக் கற்கள் குத்துவது அவள் கண்களில் வெளிபபடும் கலக்கத்திலிருந்து நன்றாகப் புலப்படுகிறது. அதையும் அவள் லட்சியம் செய்யவில்லை. இந்த உடம்பு எப்படிக் கெட்டால் என்ன? நாளைக் காலையில் சுடுப் பொசுக்கி சாம்பலாக்கி விடுவார்கள். தற்கொலைப் பிணம் என்பதற்காக டாக்டர்கள் அறுத்துப் பார்ப்பார்கள். பிரேத விசாரணை செய்யும் அந்த டாக்டர்களுக்கு திறமையிருக்குமேயானால் கைக் கெடிகாரம் ஓடுகிறதா என்று பார்ப்பதற்குக் காதிலே வைத்துக் கவனிப்பதுபோல பிரேத விசாரணையின்போது இருதயத்தையும் எடுத்துக் காதிலே வைத்துக் கேட்டால் தற்கொலைக்கான உண்மைக் காரணத்தை அது அவர்களிடம் நிச்சயம் சொல்லிவிடக்கூடும். தங்கம், பொன், மலர், மாணிக்கம் என்றெல்லாம் வர்ணிக்கிற உடலை, மண்மீது கிடத்தி, வரட்டியை அடுக்கி, நெருப்பையும் மூட்டி, இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடுவார்கள். அதற்குள் எவ்வளவு கல் குத்தினால் என்ன? முள் கிழித்தால் என்ன? சரீரம் முழுவதுமே புண்பட்டுப் போனாலும் கவலையில்லை. சிங்காரத்தைக் கடைசித் தடவையாகப் பார்ப்பதற்குக் கண்கள் மட்டும் மிச்சமிருந்தால் போதும் அவளுக்கு!

எண்ணங்கள் - பெருமூச்சுக்கள் – எதிரேயுள்ள எந்தத் தடையைப் பற்றியும் கவலைப்படாத தைரியம் – எல்லாம் சேர்ந்து அவளைச் சிற்றூருக்குக் கொண்டுவந்துவிட்டன.

சிற்றூரின் எல்லையிலுள்ள ஒரு பிள்ளையார் கோயில் மண்டபத்துக்கு அவள் வந்து சேர்ந்தாள். மண்டபத்திலிருந்து யாரோ பாடுவது அவள் காதில் விழுந்தது:

"சாலையிலே ரேண்டு மரம்
சர்க்காரு வச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்—
தங்கரத்தினமே!
உனக்கேத்த தூக்கு மரம்—
என் போன்னுரத்தினமே!"

—இந்தப் பாடலைத் திருப்பித் திருப்பி ஒரு குரல் பாடிக் கொண்டிருந்தது. மைனா. அந்தப் பாடலில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றாள். உடனே இன்னொரு பாடல்!

"யாரடி கள்ளீ நீ...?
கூறடி கொள்ளிவாய்ப்
பிசாசே!"

என்று உரக்கப் பாடியபடி அவளெதிரே வந்து நின்றான் பஞ்சாயத்தார் பரமசிவத்தின் செல்வத் திருமகன். அவனுக்குப் பைத்தியமென்ற விபரம் அவளுக்கு எப்படித் தெரியும்? அவளேதான் இப்போது முக்கால் பைத்தியமாக ஆகிவிட்டிருக்கிறாளே!

"இதுதானே சிற்றூர் என்பது?"—அவனைப் பார்த்து மைனா மெதுவாகக் கேட்டாள்.

"ஆமாம்! இதுதான் சிற்றூர்! நான்தான் பஞ்சாயத்தார் மகன்! என் பெயர் சிரஞ்சீவி! உனக்கு என்ன வேண்டும்?"

—பைத்தியம், உளர ஆரம்பித்தது. அவளுக்கோ அது புரியவில்லை.

"தீச்சட்டி சிங்காரத்தின் வீடு எங்கே யிருக்கிறது?" — ஆவலோடு கேட்டாள்.

முன் இதழில்...

'பீதாம்பர பாகவத'ரிடமிருந்து தப்பித்து வந்து விட்டோம்; பாலைவனமாக மாற இருந்த தன் வாழ்வையும் புதுப்பிப்பதாக உறுதி கிடைத்துவிட்டது சிங்காரத்திடமிருந்து'—என்ற களிப்பில் நீந்திக் கொண்டிருந்த மைனா, பெரும் சுழலொன்றில் சிக்கிவிட்ட நிலையை அடைகிறாள், பீதாம்பர பாகவதரைத் தன் வீட்டில் சந்தித்தபோது!...

அவர் தன்னை ஏமாற்றிவிட்ட கொடுமையைச் சாடுகிறாள் மைனா...

தவறு தன்னுடையதல்ல என்று முதலில் வாதாடுகிற பீதாம்பரம், 'மனைவி எங்கேயோ ஓடிவிட்டாள்' என்ற ஊராரின் பழிச் சொல்லிலிருந்து தன்னைக் காத்திட வேண்டுகிறார். மைனாவைத் தன்னுடன் வந்து விடும்படிக் கெஞ்சியும் அவள் மறுத்துவிடுகிறாள்...

இறுதியில் பீதாம்பரம், அவளைத் தீண்டுவதே இல்லை என்றும், தன் மகளைப்போல் நடத்துவதாகவும் உறுதி தருகிறார். அப்போதுதான் மைனா முதல் நாள் இரவு தன் உடல், உள்ளம் எல்லாமே சிங்காரத்தினால் பாழ்படுத்தப்பட்டுவிட்டதாக உணர்கிறாள். பீதாம்பரத்திடம் தான் 'பாபி' என்று கத்திவிட்டு, தீச்சட்டி சிங்காரத்தின் இருப்பிடத்தை நோக்கி ஓடுகிறாள்....

அங்கே தீச்சட்டி சிங்காரம் இல்லை; ஆனால் தீக்குணக் கொடியவராம் கோயில் நிர்வாகி இருக்கிறார்; எத்தனையோ காலமாக அவர் நெஞ்சிலே மூண்டிருந்த காமத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது...

மைனா அவரிடம் சிக்கி விடுகிறாள்! மூன்றாவது முறையாக அவள் கற்பு களங்கப்படுத்தப்படுகிறது!...

"இந்த ஊரில்தான் இருக்கிறது. தீச்சட்டி சிங்காரத்தின் ஊரும் இந்த ஊர்தான். என் ஊரும் இந்த ஊர்தான். சிங்காரத்தோட பெண்டாட்டி ஊரும் இந்த ஊர்தான்!"

பைத்தியத்தின் பதில் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"என்ன? சிங்காரத்துக்குக் கல்யாணமாயிட்டுதா?"

"ஏன்—நீ கல்யாணம் பண்ணிக்கலாம்னு பாக்கிறியா? அதான முடியாது. சிங்காரத்துக்குக் கல்யாணமாகி ஒரு பிள்ளைகூட பிறக்கப்போவுது."

"நிஜமாவா? உண்மைதானா நீ சொல்றது?"

"அரிச்சந்திரனோட மகனுக்கும் நான். உனக்கிட்ட ஏன் பொய் சொல்றேன். சிங்காரத்துக்குக் கல்யாணம் ஆயிட்டுது. இனி மேல் கருமாதிதான் பாக்கி!"

"அப்படியா? அட தெய்வமே!"

"தெய்வம் வேணுமா உனக்கு? இதோ கோயிலுக்குள்ளேயிருக்கு. போயி பேசிகிட்டு இரு. நான் போறேன்.

போறேன்டி போறேன்டி கட்ட
போம்மு!
போருக்குப் போறேன்டி கட்ட
போம்மு!
போகவிடை தாயேண்டி
வெள்ளையம்மா!
போனல் திரும்ப மாட்டேன்டி
வெள்ளையம்மா!"

—பாடிக்கொண்டே சிரஞ்சீவி அதைவிட்டு ஓட்டம் பிடித்தான்.

மைனாவுக்கு ஏமாற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி தாங்க முடியவில்லை. சாவதற்கு முன்பு யாரைக் கடைசி முறையாகக் காணவேண்டுமென்று ஓடோடி வந்தாளோ, அவன் தன்னை ஏமாற்றிவிட்ட எத்தன் என்று முடிவுகட்டிக் கொண்டாள்.

பைத்தியத்தின் உளறல் அவள் நெஞ்சில் பெரியதோர் குமுறலை உண்டாக்கியது. சிங்காரத்தை இனி எதற்காகக் காணவேண்டும்? மைனாவின் மனம் மரத்துப்போய் விட்டது. எவ்வளவு நேரம் அந்த மண்டபத்திலேயே உடகார்ந்திருந்தாள் என்று அவளுக்கே தெரியாது. உலகம் இருட்ட ஆரம்பித்தது. இருட்டிப்போன தன் வாழ்விலும் ஒரு நள்ளிரவு அமைதியை விரைவிலே ஏற்படுத்த அவள் அவசரப்பட்டாள்.

தனக்காக இந்த உலகத்தில் ஒருவன் கவலைப்படுவான்—தன் பிணத்தின் மீது கண்ணீர் கொட்டுவான் என்று எதிர்பார்த்தாள்; அந்தச் சிங்காரமும் இப்போது துரோகியாகி விட்டான் அவளுக்கு. மனங்கொண்ட மட்டும் அவனை சபித்தாள். ஏதோ கண்ட இடத்தில் பசயை அடக்கிக்கொள்ளத் தன்னைக் கடைப் பொருளாக மதித்துவிட்ட கயவன் என்று அவனை விமர்சனம் செய்தாள்.

அவள் அவனைச் சபித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் தான், சிங்காரம் தன் தங்கை கற்பூரத்துடன் ஊர் சுற்றுப் பயணத்தைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தான். எல்லா ஊர்களிலும் அவனுக்கு அளிக்கப் பட்ட வரவேற்பு உபசாரங்களையும், பரிசுகளையும் பற்றி ஆனந்தம் பொங்கத் தங்கையிடம் அளவளாவிக் கொண்டிருந்தான். அவனது ஆனந்தத்திற்கே அடிப்படையாக அமைந்தது மைனாவின் சந்திப்பல்லவா? அந்தச் சந்திப்பையும், சந்திப்பில் ஏற்பட்ட தீர்மானத்தையும் எப்படித் தங்கையிடம் கூறுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

அவள், தீச்சட்டி உடைந்தது பற்றி மிகவும் கவலைப்பட்டாள். "மறுநாளே தீச்சட்டி வாங்கினால்தான் குடும்பத்துக்கு நல்லது; இல்லாவிட்டால் மிகவும் பாபம் சம்பவிக்கும்!" என்று அண்ணனிடம் பயமுறுத்தினாள்.

எப்படியாவது பேச்சோடு பேச்சாக மைனாவைப்பற்றிக் கூறி, அவளோடு குடித்தனம் நடத்துவதற்குக் கற்பூரத்திடம் சம்மதம் பெற்றுவிடவேண்டுமென்று துடித்தான் சிங்காரம். மெதுவாகப் பேச்சையும் ஆரம்பித்தான். கற்பூரத்தின் கல்யாணத்திலிருந்து பேச்சைத் தொடங்குவதே நல்லது என்று கருதினான்போலும்.

"வயது ஆகிக் கொண்டே போகிறது. சீக்கிரம் இந்த வருஷமாவது உனக்குக் கல்யாணத்தை முடிக்கவேண்டாமா?" என்று தொடங்கினான்.

"ஆரம்பிச்சுட்டியா கல்யாணப் பேச்சை! சரிதான் வாயை மூடு!" என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டு, "எனக்கென்ன அவசரம்! முதலில் நீ கல்யாணம் செய்து கொள்ள சம்மதம் கொடு—நான் ஒரு அழகான பெண்ணு பார்த்து வச்சிருக்கேன்!" என்று சிரித்துக்கொண்டே கூறினாள்; கற்பூரம்.

"பெண்ணு நீ பார்ப்பதா? கற்பூரம், உனக்கு அந்தச் சிரமம் இல்லாம நானே பாத்துட்டேன்!" என்றான் சிங்காரம்.

அவன் விருப்பப்படியே பேச்சு தொடர்ந்தது.

"எங்கே யண்ணே பார்த்திருக்கிறே? எந்த ஊர்? யார் பெண்ணு?"

"சுற்றுப்பயணத்திலே தான் பார்த்தேன். ரொம்ப அழகான பெண்ணு. தங்கமான குணம். பெயரு மைனா!"

"தாயார் தகப்பனர் யாரு?"

"தாயார் தகப்பனர் இல்லை!"

"அண்ணன்......தம்பி?"

"யாருமில்லை!"

"பிறகு? அனாதைப் பெண்ணா?"

"ஆமாம்—அனாதை மாதிரி தான்! கணவன் இருந்தான்—அவனும் இப்ப இல்லை!"

"என்னது?"

"ஆமாம்! அவள் கல்யாணமானவள்!"

"ஆ! வாழாவெட்டியா?"

கற்பூரம், உணர்ச்சி வசப்பட்டுவிட்டாள். உணர்ச்சிவசப் படும்பொழுது வழக்கமாக வரும் ஆவேசம் வந்துவிட்டது அவளுக்கு! சாமியாட ஆரம்பித்துவிட்டாள். கற்பூரத்துக்கு ஆவேசம் வந்தால் அவ்வளவு தான். வீட்டு உத்திரம்வரையில் எழும்பிக் குதிப்பாள். பரணியில் ஏறி உட்கார்ந்து கொள்வாள். பத்திரகாளியின் ஆவேசம் என்று ஊரார் கூறுவார்கள். குறி கேட்க ஓடிவருவார்கள். சிங்காரத்துக்கு கற்பூரத்தை எப்படி சமாளிப்பது என்பது பெரிய பிரச்னையாகி விட்டது. ஊர்மக்கள் கூடிவிட்டால் என்ன செய்வது? எல்லோரிடமும் தன் ரகசியத்தை அவள் கூறிவிட்டால் சங்கடமாகி விடுமே — அதற்காகக் கதவை இழுத்து சாத்திக்கொண்டு, கற்பூரத்தை நோக்கி கரங் குவித்து, "அம்மா, தாயே! பத்ரகாளி! என்னை மன்னிச்சுடு!" என்று மன்றாடினான்.

"மன்னிக்கிறேன்! அடேய்—அவளை மறந்துடுறியா? மறந்துடுறியா?" என்று கற்பூரம் கத்தினாள். கத்திக் கொண்டே சிறிது நேரங் கழித்து மயங்கிக் கீழே விழுந்தாள்.

சாமி, மலையேறி விட்டது! சிங்காரத்திற்கும் சிறிது சங்கடம் விட்டது. வழக்கம்போல் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தான். கற்பூரம் கண்களைக் கசக்கிக் கொண்டே எதிரேயிருந்த அண்ணனைப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது. "அழாதே கற்பூரம்!" என்றான் பரிவோடு சிங்காரம்.

"அண்ணா! அந்த வாழா வெட்டியை மறந்துடு. அதெல்லாம் நம்ம குடும்பத்துக்கு ஆகாது. நான் உனக்கு அருமையான பெண்ணு பாத்து வச்சிருக்கேன்!" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் கற்பூரம்.

"யார் அப்படிப்பட்ட அதிசயப் பெண்ணு?" என்று வெறுப்போடு கேட்டான் சிங்காரம்.

"நம்ப பூஞ்சோலையம்மா மகள் பொன்மணி!" என்றாள் பூரிப்போடு கற்பூரம்.

"பொன்னும் வேண்டாம்; மணியும் வேண்டாம்; எனக்கு என் மைனாதான் வேண்டும்!" என்று வேகமாக வெளியே நடந்தான் சிங்காரம்.

"அப்படியா? உன் இஷ்டம்—நான் உயிரோடு இருந்து உன் பெண்டாட்டியைப்பார்க்கமாட்டேன்; அது மாத்திரம் சத்தியம்!" என்று கூச்சலிட்டாள் கற்பூரம்!

சிங்காரம், மன உளைச்சலைத் தணித்துக் கொள்ள கொஞ்சம் மருந்து தேடலாம் என்று பக்கத்துத் தெரு நோக்கி நடந்தான்.

தொடரும்

மதுரை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

★

மார்ச் 8, 9 (சனி, ஞாயிறு) நாட்களில்
பழனி, மொய்தீன் பிச்சை பந்தலில்
தாளமுத்து அரங்கில் நடைபெறும்.

தலைவர் :
நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ.

திறப்பாளர் :
புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

அறிஞர் **அண்ணா**

நாவலர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

8—3—58 இரவு
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராஜேந்திரன்
குழுவினர் நடிக்கும்
"புதுவெள்ளம்"
நாடகம்.

9—3—58 இரவு
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
குழுவினர் நடிக்கும்
மு. கருணாநிதியின்
"மணிமகுடம்"
நாடகம்.

[இரு நாட்களிலும் இசை முரசு நாகூர் அனிபாவின் இன்னிசை விருந்து நடைபெறும்.]

இரு நாட்களுக்கும் நுழைவு கட்டணம்:
ரூ. 5, 3, 2 பெண்களுக்கு ரூ. 1

[குறிப்பு: மாநாட்டில் இருநாட்களிலும் உணவு வசதிகள் உண்டு. தனிக் கட்டணம் செலுத்த வேண்டும்.]

எஸ். முத்து, வ. கு. தலைவர்.
பி. எஸ். சேக், தா. ஆவடையப்பன் செயலாளர்கள்.
எஸ். எஸ். இராஜேந்திரன், பொருளாளர்.

எங்கள் இலட்சியம் என்றும் குன்றாது; மாறாது!

"காமராசரைக் கவிழ்க்க அண்ணாதுரை தக்க சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருக்கிறான்; அதற்காகத்தான் ஆச்சாரியாரை நாடியிருக்கிறான்!" என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள், நானும் ஆச்சாரியாரும் ஒரே மேடையில் பேசியது குறித்து!

"அன்றைய தினம் நடைபெற்ற அந்தக் கூட்டமானாலும் சரி; அல்லது வேறு கூட்டமானாலும் சரி; தப்புக் கருத்துக்களை அது உண்டாக்குமானால் நான் அருள்கூர்ந்து அங்கத்தினர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன் — எனக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன; நான் சார்ந்திருக்கக் கூடிய கட்சியும் இருக்கிறது; அதற்குக் குறிப்பிடத் தக்க அளவு நாட்டில் செல்வாக்கு இருக்கிறது; அது வளர்ந்துகொண்டு வருகிறது; இனியும் வளரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

"ஆகவே கூட்டு சேருவதின்மூலம் உள்ளதைக் கொடுப்பதோ, இல்லாததை ஏற்படுத்தவோ எனக்கோ அல்லது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் முறையல்ல!

"நான் புதிராக இருக்கிறேன் என்று யாராவது கருதினால், நான் அருள் கூர்ந்து அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்—எனக்கு இன்று இருக்கிற சில கொள்கைகளுக்காகவும் நான் பரப்பவேண்டுமென்று கருதுகிற சில திட்டங்களுக்காகவும், அனைவருடைய பேருதவியையும் நாட நான் கடமைப்பட்டிருக்கிறேன்; அந்த வகையில் நான் தேடித் தேடிச் செல்கிறேன்; ஓடி ஓடி அழைக்கிறேன்; கிடைக்கிற உதவிகளை எல்லாம் பெறுகிறேன். ஆனால் அதே நேரத்தில், எங்களுக்கு இருக்கிற கொள்கைகளை விட்டு விடவேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். அதுவே சில அங்கத்தினர்கள் மெத்த அன்புடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்பார்களேயானால், எங்கள் அடிப்படைக்கொள்கைக்கு மாறுதல் இல்லாமல் ஒத்துழைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கும்.

—சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணா

கற்பனை உரையாடல்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தது! கவிதை எழுதி முடித்த பிறகும்கூட மலர்களின் அந்த அற்புதக் காட்சி மட்டும் அவர் உள்ளத்தை விட்டு அகலவே இல்லையாம்! படுக்கையிலே படுத்திருக்கும் பொழுது அவர் அந்த மலரை நினைப்பாராம். அவைகள் தென்றலில் ஆடுவது அவர் உளக்கண் முன்னே தோன்றுமாம்! உடனே அவரும் எழுந்திருந்து மலர்களைப் போல் நடனம் ஆட ஆரம்பித்து விடுவாராம்!

"மின்னலைப் போன்றந்த
மலரின் காட்சி
உளக்கண்ணில் உதித்து
விடும்
தனிமையிலே இனிமை தரும்!
இனிமை
உள்ளமதை நிரப்பிக் களிப்
பூட்டும்!
எழுந்திருக்கும்! மலரிடை
நடனமாடும்!"

(வேர்ட்ஸ் வொர்த்:
'டாஃபொடில்ஸ்']

வேர்ட்ஸ் வொர்த்தைப் போலவே வள்ளுவரும் ஒரு நாள் நாங்களிருக்கும் குளத்திற்கு வந்தார். குளத்தின் தண்ணீர் மட்டத்திலே கதிரவன் ஒளியோடு காதல் உரையாடல் நடத்திய தாமரையின் அழகை அள்ளிப் பருகியவாறு அன்று முழுவதும் குளத்தங்கரையிலேயே உட்கார்ந்து விட்டார்! உழவர்களெல்லாம் வந்து மடையைத் திறந்துவிட்டு வயலிலே உழ ஆரம்பித்தார்கள். எனவே குளத்தின் நீர் மட்டம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. தாமரைத் தங்கையும் தாழ்ந்து தண்ணீர் மட்டத்திறகுப் போய் விட்டாள்! மாலையில் மடைகள் மூடப்பட்டன. உழவர்கள் வீடு நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். எனவே குளத்திலே நீர் மட்டம் உயர்ந்தது. மாலைக் கதிரவன், காதலி தாமரையிடம் விடைபெற்று மறைய நினைக்கிறான்! காதலி, காதலனுக்கொரு முத்தமிட எண்ணுகிறாள்! ஆனால் கதிரவனை எட்டிப் பிடிக்க அவளால் இயலவில்லை! தாமரை ஏம்புகிறாள்! கதிரவனின் ஒளிக்கிரணங்களையாவது தழுவி மகிழ்கிறாள்!

வள்ளுவர், இந்தத் தாமரைத் தங்கையோடு மனிதனை ஒப்பிட்டுப் பார்க்கிறார். 'குளத்திலே வெள்ளம் அதிகமானால் தாமரை தன் குறிக்கோளை அடைகிறாள்! அப்பப்பா! மனிதா, உன் உள்ளக் குளத்திலே ஊக்கம் பெருகினால், நீயும் உயர்வடைவாய்!'

ஆனால் தமிழகத்திலே "எல்லாம் என் தலைவிதி! நான் ருஷ்யாவிலேயாவது அமெரிக்காவிலேயாவது பிறந்திருக்கக் கூடாதா?... அல்லது மோட்ச உலகத்திலேயே இருந்திருக்கக் கூடாதா?... அப்பா, பரந்தாமா! மோட்ச உலகத்திற்கு உடனே வழியைக் காட்ட மாட்டாயா?" என்பன போன்ற உரையாடல்களைத்தானே ஒவ்வொரு நாளும் கேட்கிறோம்! ஏ, தமிழகமே! நீ, 'தலைவிதி! தலைவிதி!' எனக் கூறிக் கொண்டு, இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் தூங்கப் போகிறாய்?

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்
அசைவிலா
ஊக்கம் உடையா னுழை"

என்ற குறளைப் படித்தவர்களும் குறட்டை விட்டு உறங்கிடுதல் நன்றோ?

தலைவிதி, தலைவிதி எனத் தூங்கியது போதும்! தோள் தட்டி எழுவீர்! ஊக்கம் கொண்டுழைப்பீர்! ஆக்கம் பெற்று உயர்வீர்! வணக்கம்!

முல்லை: முடிவுரை கூறும் முகத்தான் நான் உங்கள் முன்னிலையில் வந்திருக்கிறேன்! அரசியலும் இலக்கியமும் கலந்த அறிவு விருந்திலே மது உண்ட வண்டினைப் போல மலர்ந்திருக்கும் தோழர்களே! தோழியர்களே! எங்களின் துயர் கண்டு தன் தேரையே கொடையாக ஈந்த பாரியையும், பொன்னியைப் பெண்ணாக்கி அவளுக்கு மலராடை அணிவித்து மகிழ்ந்த இளங்கோவடிகளையும், பூக்களின் பண்பை எடுத்துக் காட்டி மக்களை நல்வழிப் படுத்தும் வள்ளுவரையும், பூக்களின் ஆட்டத்திலே போதையுடன் ஆடிடும் மேனாட்டுக் கவிஞரையும் கண்டு களித்தீர்கள்!

இங்ஙனம் பலப் பல இன்ப எண்ணங்களைத் தோற்றுவிக்கும் நாங்கள் ஒரு சில சமயங்களில் துன்ப எண்ணங்களையும் தட்டி எழுப்பத்தான் செய்கிறோம்!

"ஐயோ! முல்லை மலர்ந்துவிட்டது! என்னை என் காதலன் தனியே விட்டு விட்டுப் போய் விட்டது போல, கதிரவனும் வானமெனும் காரிகையைக் கைவிட்டு விட்டுப் போய் விட்டான்! 'கயவனே! கதிரவனே!' எனக் கூறி அந்த வானம் கோபத்தால் சிவக்கிறது! துன்பம் திரண்டுவர இரவு வேறு வந்துவிட்டது!"—இப்படிச் சிலர் நான் மலர்வதைப் பார்த்து மனம் வருந்திப் புலம்பத்தான் செய்கிறார்கள்!

என்னைப் போலத்தான், ரோஜா மலரணிந்த பண்டிதரும் பலர் உள்ளத்திலே துன்ப அலைகளை எழுப்பி விடுகிறார்! "இமயம் முதல குமரிவரை இணைபிரியா நாடு!...அதைத் துண்டாடுவது கொலை பாதகம்!......ஆனால் தமிழகத்தை மொட்டையடிக்க, திராவிடத்தைத் துயரத்துக்குள்ளாக்கப் பெரியதொரு திட்டம் வந்துகொண்டிருக்கிறது! வரி கொடுங்கள்! நிதி கொடுங்கள்! வடக்கினிலே அணை கட்ட—சோலை வளர்க்க—சாலை அமைக்க! வடக்கு வாழ்ந்தால் என்ன? தெற்கு தாழ்ந்தால் என்ன? பொதுவாக முன்னேற்றமடைவது பாரதமேயன்றோ?..."—நேரு இங்ஙனம அடிக்கடி கூறுவது, அவரது சிஷ்ய கோடிகள் அதை அப்படியே திருப்பிச சொல்லுவது, நான் ஒவ்வொரு நாளும் மலர்வதைப் போன்றது!

"சுடர் சொல் வானம் சேப்ப,
படர் கூர்ந்து
எல் உறும் பொழுதில் முல்லை
மலரும்!"

கணவனைப் பிரிந்த காதலி, நான் மலர்வதைக் கண்டு வருந்துவது போல், நேரு பண்டிதரின் ஏக பாரதப் பேச்சைக் கேட்டு அடிமைப்பட்ட திராவிடர் உள்ளமும் வருந்தத்தான் செய்யும்!

'விடுதலை வீரன்' என்ற காதலன் தன் காதலி திராவிட மங்கையை விட்டு விட்டு வடக்கத்தி மார்வாடிப் பெண்ணின் மாய வலையிலே சிக்கி விட்டான்! எனவே காதலனை எதிர்பார்த்து எதிர்பார்த்து திராவிட மங்கை கண்ணீர் விடுகிறாள்! அவள் கண்கள் கண்ணீரால் குளமாகின்றன! கண்கள் கோபத்தால் சிவக்கின்றன! திராவிடத்தின் வானமும் சிவக்கிறது! இரவு நேரம் வருகிறது; ஆனால் அது துன்ப எண்ணங்களையே தருகிறது. திராவிட மங்கை தன் பழங்காலச் சிறப்பையும், தற்காலத் தாழ்வையும் எண்ணி எண்ணி ஏங்குகிறாள்! 'வடக்கின் கையிலே சிக்கிய விடுதலை வீரன் திரும்பவே மாட்டானா?...'—இதே நினைவில், அவள் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறாள்! திராவிடத்தில் என்றுமே இருள் கவ்வி இருக்குமா என்ன?

ஒரு நாள் நிச்சயம் பொழுது புலரும்! அடிவானம் சிவக்கும்! மேல் வானத்திலே உள்ள சிறிய கருமை இருள் கூட முற்றிலும் நீங்கும்!

அப்பொழுது...திடீரென திராவிட மங்கையின் காதலனின் தூதுவன் — உதயசூரியன் சிகப்பு அடிவானத்திலே தோன்றுவான்! அதைக் கண்டு மகிழ்ச்சியுடன் திராவிட மங்கை ஆடுவாள்! பள்ளு பாடுவாள்!

ஆனால் மேல் வானத்திலே உள்ள கருமை இருள் முற்றிலும் நீங்கிவிட, சிகப்பு அடிவானத்திலே உதிக்கின்ற 'உதயசூரியன்' — திராவிடத்தின் தூதுவன் உயர்ந்திட வேண்டுமெனக் கூறவும் வேண்டுமோ?

இவைகளை உணர்த்திக் கொண்டுதான் நான் ஒவ்வொரு நாளும் மலர்கிறேன்!

"சுடர் சொல் வானம் சேப்ப,
படர் கூர்ந்து
எல்உறும் பொழுதில் முல்லை
மலரும்!"

எனவே திராவிடத்தின் மலர்களே! திராவிட அன்னையின் கண்ணீரைத் துடைத்திட நாமும் நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்! மெல்லிய மலர்களான நம்மால் என்ன செய்ய இயலும்?.........நம்மைச் சூடிடும் மங்கைகளுக்கு அழகும் நறுமணமும் தருவதோடு சிறிது அறிவுரைகளும் சேர்த்துத் தரலாமன்றோ?

திராவிட அன்னையின் கண்ணீரைத் துடைத்திட—விடுதலை பெற்று, திராவிடக் கூட்டாட்சி அமைய — மலர்களாகிய உங்களை ஊக்கத்துடன் ஆக்கம் புரிய வேண்டுமாறு மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம்!

அன்பு பொங்கி அறிவு வளர, ஊக்கம பொங்கி ஆக்கம் பெருக, விலங்கு முறிந்து விடுதலை பெற, விடுதலை முழக்கம் எங்கெனும் பரவ, மலர்களின் பண்பு எங்கெனும் பொங்க, மங்கைகளே! நீங்கள் எங்களை அணிவீர்! வணக்கம்!

[இதைக் கேட்ட நேருவின் சட்டைப் பையிலிருந்த ரோஜா மலர்கூட, "திராவிடநாடு திராவிடருக்கே! தூங்கியது போதும்! திராவிடத்தைக் காக்க தோள் தட்டி எழுவீர்!" எனக் கூறுவது உங்கள் காதுகளில் விழவில்லையா?]

—"இன்பபுரியான்"

பூவும் நாரும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

"முடியாது! நீ விட்டில் பூச்சியாகிவிடுவாய்......அது உன்னை சுட்டெரித்துச் சாம்பலாக்கி விடும்...அந்தப் பழிக்கு நான் ஆளாக விரும்பவில்லை!...நீ கண் நிறைந்த கணவனோடு மனம் நிறைந்த மணவாளனோடு வாழ்வதைக் காணவே துடிக்கிறது என் இதயம்!"

"இது தான் உங்கள் முடிவா?"

"ஆம்; நான் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் அதை யாருமே மாற்ற முடியாது என்பதை நீ அறியாததல்லவே!"

"பரவாயில்லை; என் ஆசையை நிராசையாக்கிவிட்டீர்கள்; என் கனவை கலைத்துவிட்டீர்கள்; என் எண்ணத்திலே மண்ணை வாரிப் போட்டுவிட்டீர்கள்! ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்—'கலை, கலை' என அலறும் நீங்கள் என்றாவது ஒரு நாள் வாழ்விற்குக் கலை மட்டும் போதாது; காதலும் தேவை என்பதை உணரத்தான் போகிறீர்கள்!"

—மீராவால் பேச முடியவில்லை; துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது; கண்கள் குளமாயின; கைகளால் முகத்தை மூடிக்கொண்டு ஓடிவிட்டாள்!

●

கதிரவன் கண் திறந்தான்; ஜெகமே ஜெகஜ்ஜோதியாய் பிரகாசித்தது. ஆனால் மீராவின் உள்ளம் மட்டும் இருண்டே கிடந்தது. அழுது அழுது அவள் மதிவதனம் வீங்கி இருந்தது. கண்கள் இரத்தக் கோளமாக மாறியிருந்தன. காலையிலிருந்து சுரேஷ் அவளது கண்களில் படவே இல்லை. காரணம், அவளுக்குப் புரியவில்லை. மெல்ல அவனது அறையுள் நுழைந்தாள். அங்கே சுரேஷ் இல்லை! அவனது வீணையும் இல்லை! கடிதம் ஒன்று காத்திருந்தது மீராவுக்கு:

"அன்பு மீரா!

உன் மனதை மிகவும் புண்படுத்தி விட்டேன். என்னை மன்னித்துவிடு. என் வாழ்க்கையின் இலட்சியமும், உன் இலட்சியமும் இரு துருவங்கள்! அது இணைவது சாத்தியமே அல்ல. இந்த 'நார்' உன் வாழ்க்கை என்ற மலர்களைத் தொடுக்க வலுவற்றது! ஆகவே, உனக்குத் தகுந்த மணவாளனைத் தேர்ந்தெடுத்துக்கொள்! நான் என் பாதையில் போகிறேன். என் முயற்சியில் நான் வெற்றி பெற்றால் உன்னை வந்து பார்க்கிறேன். அப்பொழுது நீ தங்க விக்ரகங்களைப் பெற்றெடுத்து நல்வாழ்வு வாழ்வாயாக! என்னுடைய இலட்சியத்தில் தோற்றால் நான் திரும்பவே மாட்டேன்! என் சொத்து முழுவதையும் உன் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறேன்!

அன்பன்,
சுரேஷ்"

●

பகல் இரவாகி, இரவு பகலாகி, நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி ஓடிக்கொண்டிருந்தது காலம்.

சுரேஷ் தன் இலட்சிய புரியை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான். கேலி மொழிகள் — கிண்டல் வார்த்தைகள் தான் அவனுக்குக் கிடைத்த ஆரங்கள். அவைகளைப் பொருட்படுத்தாமல், வழியில் காலில் குத்திய முட்களைத் தூர எறிந்துவிட்டு தன் பயணத்தைத் துவளாமல் தொடர்ந்தான். நடன ராணி தாராவின் வீட்டின் அருகே ஒதுங்கி விட்டு மௌனமாகப் புன்னகை சிந்தியது, காலம்!

தாரா—பெயருக்குப் பொருத்தமான தேகம் படைத்தவள்! நாட்டியம் ஆடுவதற்கென்றே பிறந்த பேரழகி! நாட்டிய உலகின் பேரொளி! சுருக்கமாகச் சொன்னால் அவள் ஒரு கலைக் கோயில்! அத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற வனிதாமணியின் காதுகளில் சுரேஷ் மீட்டிய வீணையின் நாதம் விழுந்தது. தோல்வியைக் கண்டு துவண்டு போயிருந்த அவன் இதயம்—துன்பத்தை அனுபவித்து அனுபவித்து இரத்தக் குளமாகிப் போயிருந்த அவன் உள்ளம்—சோகக் காவியமாக மாறிய அவன் வாழ்வு — எல்லாமே விடைபெற்றன, தாராவின் ஆதரவால்! எங்கே 'கலை' இருந்தாலும் அதைத் தேடிப் பறக்கும் தும்பி, தாரா. ஆகவே, சுரேஷின் கலை வளர—அவன் உள்ளம் மகிழ—அவன் புகழ் ஓங்க — அவள் பெருமுயற்சி எடுத்தாள். அவன் வீணையை மீட்டுவான்; அவள் ஆடுவாள்; ஆடிக் கொண்டேயிருப்பாள். அவன் கை வலிக்கிறதென்று தான் மீட்டுவதை சுரேஷ் நிறுத்தியிருக்கிறானே தவிர, அவள் கால் வலிக்கிறதென்று கூறி ஆட்டத்தை நிறுத்தியதே இல்லை!

இத்தனை நாட்கள் அவன் உணராத உணர்ச்சி திடீரென்று அவன் உள்ளத்திலே குடிகொண்டது. 'கலை, கலை' என்று துடித்துக் கொண்டிருந்த இதயம் வேறு 'எதையோ' தேடியது. இது வரையில் அவன் கண்களுக்குத் தெரியாத 'அழகு' திடீரென தெரிய ஆரம்பித்தது. 'ஒரு ஆணின் வாழ்வு ஒரு பெண்ணின் உறவின்றி முற்றுப் பெறுவதில்லை' என்ற உண்மையை உணர்ந்தான். ஆம்; அவன் இதயம் 'காதலை' விரும்பியது. அருகிலிருந்த அழகு மலரை அவன் மனம் நாடியதில் வியப்பில்லை தான். தாரா அவன்மீது சொரிந்த அன்பு, பாசம், நேசம் எல்லாவற்றையும் சாதகமாக்கிக் கொண்டு, அவளை மானசிகமாகக் காதலிக்க ஆரம்பித்தான் சுரேஷ். இத்தனை நாள் 'கலை, கலை' என எக்காளமிட்டுக் கொண்டிருந்த அவன் உள்ளம் 'தாரா தாரா' என ஒலமிட ஆரம்பித்தது. அவளின்றேல் தன் வாழ்வு இல்லை என்ற நிலை பெற்றான். அய்யோ, காதலே! நீ தான் எத்தனை எத்தனை வர்ண ஜாலங்களைக் காட்டுகிறாய்! உன் எழில் ஓவியத்தில் மதிமயங்கி விழுந்து விடுபவர்களை எத்தனை எத்தனை விதமாக வாட்டி, வதைத்து, வேதனை அளிக்கிறாய்! எத்தனை எத்தனை இடர்களை—தடங்கல்களை உண்டாக்குகிறாய்! உன் பிறவிக் குணமே இதுதானா? அப்படி என்றால் நீ இந்த உலகில் பிறந்தே இருக்க வேண்டாமே! சுரேஷினால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் தத்தளித்தான்; தடுமாறினான். ஒருநாள் கேட்டே விட்டான்:

"தாரா! அனாதையாய், ஆதரவற்றவனாய், வாழ்வில் வெறுப்புற்றவனாய், வேதனையின் வடிவமாய் காலம் கடத்திக் கொண்டிருந்த என்னை ஆளாக்கிய பெருந் தெய்வமே! என் கலை ஞானம் உலகெலாம்—நல்லவா இதயமெலாம் இன்பம் சுரக்க உதவிய மாதர் குல மாணிக்கமே! கலா தேவியின் திலகமே! இத்தனை நாள் அன்பு மழை பொழிந்து, ஆதரித்ததைப்போல் காலமெல்லாம் செய்வாயா?"

"சுரேஷ், உமக்கேன் சந்தேகம்? உங்கள் கலைத் திறமை பிரகாசிக்க நான் செய்வது கலா தேவிக்கு நான் செய்யும் சேவையாகும்! ஆகவே நீங்கள் நன்றி செலுத்தத் தேவை இல்லை."

"குடத்திலிட்ட விளக்காக இருந்த என்னைக் குவலயம் முழுதும் பிரகாசிக்கச் செய்தது போல் நீங்கள் என் வீட்டின் விளக்காக இருப்பீர்களா என்கிறேன்!"

"என்ன?"

"ஆமாம் தாரா! பூவையும், நாரையும் இணைத்து ஆரமாக்கலாம் என்கிறேன். அதனால் இந்த நாரும் மணம் பெறுமல்லவா?"

"சுரேஷ், தவறு! தவறு, சுரேஷ்!"

"ஏன்? என்மேல் அன்பில்லையா உங்களுக்கு!"

"அன்பிருக்கிறது; ஆசையிருக்கிறது; ஆனால் 'காதல்' தான் இல்லை!"

"உங்களை மனைவியாகப் பெறும் அருகதை எனக்கில்லையா?"

"நான் அப்படிக் கூறவில்லையே! என் இதயத்தில் இடமில்லை என்கிறேன்! எனக்கு இருப்பது ஒரே இருதயம்... அதில் இருவருக்கு இடமில்லை. வேறு ஒருவர் வாடகையின்றி முன்னமே குடியேறி விட்டார்! ஒருவேளை, உங்களை முதலில் சந்தித்திருந்தால்..."

"மன்னித்து விடுங்கள் தாரா...மன்னித்து விடுங்கள்! ஆசையின் கட்டுப்படாத உணர்ச்சியின் வேகத்தில் வார்த்தைகளைச் சிதற விட்டு விட்டேன்...என் வாழ்க்கையில் நினைத்ததெல்லாம் நடந்தது! ஆனால...ஆனால்..."

—சுரேஷால் பேச முடியவில்லை. எழுந்தான்...நடந்தான்.

"எங்கே போகிறீர்கள்?"

"எங்கேயோ, என் கால் போன போக்கில்! என் வாழ்வின் திசையே மாறிவிட்டது! இனி எங்கு போனால் என்ன?... நான் போகிறேன். மரணத்தை முத்தமிடும்வரை நீங்கள் செய்த உதவியை—ஏன், உங்களையே மறக்க மாட்டேன்!"

"சுரேஷ்...சுரேஷ்!"

அது அவன் காதுகளில் விழவே இல்லை......அவைகளில் ஒலித்துக் கொண்டிருந்ததெல்லாம் அன்றொரு நாள் மீரா கூறிய 'கலை மட்டும் போதாது வாழ்விற்கு...காதலும் தேவை' என்பதுதான்!

உலகமே சூன்யமாகத் தெரிந்தது சுரேஷிற்கு! புகழ், செல்வாக்கு எதுவுமே தேவை இல்லை இப்போது அவனுக்கு. அன்பு ஒன்றுதான் அவனுக்குத் தேவை. அதை யார் அளிக்கப் போகிறார்கள்? அது என்ன கடையிலே விற்கும் சரக்கா? அவன் இலட்சியத்திலே வெற்றி பெற்றான்! ஆனால் காதல்...... அவன் இதய ஆசை...இன்பக் கனவு...?

உலகமே வெறுத்தது அவனுக்கு. கொந்தளிக்கும் கடலாகியது அவன் உள்ளம். எங்கெங்கோ அலைந்தான். மீராவின் நினைவு மெள்ள எழ ஆரம்பித்தது அவன் உள்ளத்தில். நாளுக்குநாள் அது வளர்ந்தது. ஒன்று கிடைக்கவில்லை என்றால் மற்றொன்றைத் தேடுவது இயற்கைதானே?

அவன் கால்கள் வீட்டை நோக்கி ஓடின. அதற்கு முன்னாலேயே அவன் உள்ளம் அங்கு பறந்தது. 'மீரா எனக்காகக் காத்திருப்பாள்'—இப்படி இரகசியம் பேசிற்று இதயம் ஒருவேளை, மணம் முடிந்து விட்டிருந்தால்...? அவனால் எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை...

இழுத்துப் பூட்டிய கதவுகள் அவனை வரவேற்றன. இடி விழுந்தது அவன் இதயத்தில்! மீரா பக்கத்து கிராமத்து மிராசுதாரின் தர்ம பத்தினியாகி ஆண்டுகள் இரண்டாயினவாம். அத்தை 'பரலோகம்' போய் ஆறுமாதமாகிறது என்ற செய்தியை அவ்வூரார் அவனுக்கு அறிவித்தனர்.

ஓடினான் மீராவைத் தேடி... இரவு நெடுநேரமாகி விட்டிருந்தது. ஆகவே மிராசுதாரின் மாளிகையின் இரும்புக் கதவுகள் பூட்டப் பட்டிருந்தன. புழு போலத் துடித்தான். அருகிலே இருந்த நந்தவனத்தில் அமர்ந்து வீணையை மீட்ட ஆரம்பித்தான். அவன் இதயத்தின் அழுகை சோக நாத வெள்ளமாக மிதந்தது—ஒவ்வொரு ஒலியிலும் அவன் இதயத் துடிப்பு பிரதிபலித்தது—மூடிய கண்களிலிருந்து கண்ணீர் அருவியெனக் கொட்டியது — இதயத்தின் இரத்தத் துளிகள், அவைகள்!

மெள்ள கண்களைத் திறந்தான். எதிரே மீரா கண்ணீர்

[தொடர்ச்சி பக்கம்—10]

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

அசையவில்லை. உங்களைப் பின் தொடர்ந்து உங்கள் அப்பா வும் ஓடிவந்தார்கள், 'தியாகு, தியாகு' என்று அலறிக் கொண்டு! அவருக்குப் பின்னால் அவரது அடிமைகள் பாய்ந்து வந்தார்கள். இரவு நேரம்-சுடர் விட்டு எரியும் குடிசை — அதை நோக்கி ஓடிவரும் உருவங்கள்— அந்தக் காட்சி ஏதோ ஒரு போர்க்களம்போல் தோன்றி யது, சின்ன எசமான்! ஆனால் இத்தனைக்கும் காரணமான நானோ தூரத்தில் நின்று கொண்டிருந்தேன், பரிதாபத் திற்குரிய பார்வையாளனாக!

"கருப்பா, கருப்பா' என்று அலறிக் கொண்டு ஓடி வந்த நீங்கள், திடீரென்று குடிசைக் குள் பாய்ந்து விட்டீர்கள்! ஆமாம்; கருப்பனைத் தேடத் தான் நெருப்பிலே புகுந்து விட் டீர்கள்! ஐயோ!...நான் அங்கே இல்லையே! என்னைத் தேடி தீயிலே சிக்கி விட்டீர்களே; சின்ன எஜமான்!' என்று அல றினேன் நான். ஓடோடி வந் தேன். தீயுக்கு என்ன களிப்போ தெரியவில்லை; நம்மிருவருக்கு மிடையே நிலவிய நட்பால் தனக்கு நல்ல உணவு கிடைத்து விட்டதே என்ற காரணத் தாலோ என்னவோ—கொழுந்து விட்டு எரிந்தது.

"நான் அலறியது தங்கள் செவிகளில் விழவில்லை; நீங்கள் தான் குடிசைக்குள் புகுந்து விட்டீர்களே!

"நான் குடிசையை நெருங்கி விட்டேன். அதே நேரத்தில் தான் இந்த எதிர்பாராத காட் சியைத் தெரிந்து தங்கள் தந் தையும், ஆட்களும் ஓடிவந்தார் கள்.

"எரிந்து கொண்டிருந்த வீட் டுக்குள்ளிருந்தும் "கருப்பா! கருப்பா! நீ எங்கே இருக்கிறாய்?" என்று நீங்கள் அலறியது என் காதுகளில் விழுந்தது. "இங்கே தான் இருக்கிறேன்!" என்று பதிலுக்குக் கத்தினேன்! மறு கணம் என் உள்ளுணர்வு என் னைச் சாடியது. நான் தீயுக்குள் பாய்ந்தேன்! என்ன கொடுமை ...நீங்கள் நெருப்புக்கு நடுவிலே நின்று தத்தளித்துக் கொண்டி ருந்தீர்கள்!

"என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற பெருந்தன் மையால் நீங்கள் நெருப்பிலே குதித்தீர்கள்! ஆனால், உங்க ளைக் காப்பாற்றி நான் தூக்கிக் கொண்டு வந்தேன்! அதை நீங்கள் உணரவில்லை! அது உங்களுக்குத் தெரியாது!......... அதை உணர்த்த மட்டும்தான் நான் இங்கே நின்று கொண்டி ருக்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள் சின்ன ஐயா...... உங்கள் இமைகள் திறக்காதா —மயக்கம் தெளியாதா— 'எங்கே சென்றாய் கருப்பா!' என்று ஏங்கிக் கிடந்த உங்கள் முன்னால் நான் நிற்பதைக் காணமாட்டீர்களா — என்று தான் நான் நிற்கிறேன்...கால் கடுக்க நிற்கிறேன்!...

"ஆ!...என்ன இது?...சின்ன எஜமான்...உங்கள் இமைகள் அசைகின்றனவே! வாய் முணு முணுக்கிறதே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?.....அதோ.... அதோ...க...ரு...ப்...பா!...கருப் பனைத்தானே நீங்கள் அழைக் கிறீர்கள்! நான் இங்கேதான் இருக்கிறேன்!......இங்கேதான் இருக்கிறேன்!...

●

தியாகுவின் விழிகள் திறந்தன. படுக்கையிலிருந்து எழுந் தான். கருப்பனைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

சகிக்கமுடியாத காட்சியாக அல்ல; கண்கொள்ளாக் காட் சியாக இருந்தது அது— பண்ணையாருக்கு, அப்போது!

அவர்கள் இருவருக்கு மிடையே இருந்த சாதிக் கொடுமை பயங்கரப் பள்ளமாயிற்றே; அது எப்படித் தூர்ந்தது?

எல்லையற்ற தொல்லைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் அப் பாற்பட்டதல்லவா, அவர்கள் இருவருக்கு மிடையே நிலவிய அன்பு — அந்த அன்புதான் அடைக்கும் தாழ் இன்றி அவர்களை ஒன்று சேர்த்தது.

—சொர்ணம்

தி. மு. கழகக் கிளைகளுக்கு வேண்டுகோள்

கிளைக் கழகப் பதிவுச் சீட்டுக்கள் புதிதாகத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட வேண்டியிருப்ப தால் தி. மு. கழகக் கிளைகளனைத்தும் தற்போதுள்ள நிர் வாகிகள் பெயரை அவரவர் தம் தெளிவான முகவரியுடன், 15—3—58-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக் கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எழுதியனுப்பும் விவரத்தில் உறுப்பினர் சேர்த்தனுப் பிய நாளையும், தற்போதுள்ள உறுப்பினர் எண்ணிக்கை யையும், குறிப்பிட்டு அனுப்பக் கேட்டுக்கொள்வதுடன், உறுப்பினர் சேர்த்தனுப்பாத கிளைகள் பதிவு செய்துகொள் ளப்படமாட்டாவென்பதையும் தலைமைக் கழகம் அறிவித் துக்கொள்கிறது.

புதுக் கிளைகள் துவக்கப்பட்டு, அதுபற்றிய விவரத்தை தலைமைக் கழகத்திற்கும், மாவட்டக் கழகத்திற்கும் அறிவிக் கப்படாமல், எல்லா மாவட்டங்களிலும் அநேக கிளைக் கழ கங்கள் இருப்பதாலும், பழைய கிளைகளிலேயே நிர்வாகிகள் மாறுதல் அவ்வப்போது நடைபெற்று அதனைத் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்படாமல் இருக்கின்ற காரணத் தாலும், எல்லா (புதிய-பழைய)க் கிளைகளும் தங்கள் தங்கள் நிர்வாகிகளையும், முகவரியையும் தெரிவித்தபின்பே பதிவுச் சீட்டுக்கள் அனுப்பப்படவிருக்கின்றன.

15—3—58-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி மீண்டும் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பூவும் நாரும்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

முத்து முத்தாய் சிந்திக் கொண் டிருந்தாள்.

"மீரா..."—இதயத்தின் அடித் தளத்திலிருந்து வந்தது, குரல்.

"அத்தான்...!"

"மீரா, வந்து விட்டாயா? எனக்குத் தெரியும் மீரா, நீ வரு வாய் என்று!"

"அத்தான்..."

"ஆம் மீரா; உன் அத்தான் தான்! இனி உன்னை விட்டுப் பிரிய மாட்டேன், மீரா!"

"அத்தான்..." — அலறினாள் அவள்.

"ஆம் மீரா!...கலை என்ற பித்து பிடித்து பத்தரை மாற்றுத் தங்கமே, உன்னை இழந்தேன்! புகழ், செல்வாக்கு தேடி பொற்சிலையே, உன்னை இழந்தேன்! வாழ்வின் இன் பத்தையே இழந்தேன்! மூடிப் போயிருந்த கண்கள் திறந்து விட்டன... மீரா, வா...வா...... என் அருகில் வா......தணலாக எரியும் என் இதயத்தைக் குளி ரச் செய்! என் வளர் நிலவே! என் கலை போதை தெளிந்தது! கலை மட்டும் போதாது; காத லும் தேவை வாழ்விற்கு என்று அன்று நீ கூறியதை இத்தனை நாட்கள் பொறுத்துத்தான் உணர்ந்தேன்! அதோ, வாழ்க் கையின் இன்பம் வெள்ளமாக ஓடுகிறது; அள்ளிப் பருகு வோம், வா! பாச மிகுந்த வளே! நேசக் கரத்தை நீட்டுகி றேன்...வா...வா...வா..."

சுரேஷ் மீராவின் அருகில் ஓடினான்.

"அத்தான்! என்னைத் தொடா தீர்கள்!"

"ஏன்...ஏன்?"

"ஏனா? நான் வேறு ஒருவரின் உடமை!"

"கலை இல்லை எனக்கு! நீ எனக்குத் தேவை!"

"அன்று கலைப் பைத்தியம் பிடித்திருந்தது; இன்று உங்க ளுக்குக் காதல் பைத்தியம் பிடித்திருக்கிறது!"

"ஆம்; உண்மைதான்! பைத் தியம் தீர்க்கும் மாமருந்து நீ!"

"சீ, தூரப்போங்கள்! உறவை நினைத்து—நீங்கள் செய்த உத வியை நினைத்து — உங்களைக் காண வந்தேன். ஆனால் அன்பு உள்ளம் கொண்ட அத்தானைக் காணவில்லை. காம உள்ளம் கொண்ட காண்டாமிருகத் தைக் காணவா என் கண்கள் குருடாகாமல இருக்கின்றன? சீ, வெறிபிடித்தலையும் வேங் கையே, போய்விடு! போய்விடு! இன்றோடு உங்கள்மீது கொண் டிருந்த அன்பு, ஆசை, பாசம், நேசம், எல்லாமே போய்விட் டது! எல்லாமே போய்விட் டது!"

—மீராவால் பேச முடிய வில்லை; வீட்டினுள் ஓடினாள்; விக்கி விக்கி அழுதாள்!

சுரேஷ் தன் நினைவு பெற் றான், காதல் உணர்ச்சி அவ னைப் பழி வாங்கியதை எண்ணி வெட்கமடைந்தான். தான் செய்த தவறை எண்ணி எண்ணி கண்ணீர் வடித்தான். தன்னை மன்னிக்கும்படி மீரா வுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு வீடு திரும்பினான்.

●

நாட்கள் நகர்ந்தன. சுரேஷ் காதலித்த வீணை மீட்பாரற்று கிடந்தது. அவன் உடலும் இளைத்தது. உள்ளமும் சுருங்கிக் கொண்டிருந்தது. அவ்வேளை யில் மீரா திரும்பினாள், வித வைக்கோலத்தோடு! பொன்னார் மேனியாள் பூவிழந்து, பொட்டி ழந்து திரும்பினாள். அவளது விதவைக் கோலத்தைக் காண காண விம்மினான் சுரேஷ்!

இரண்டு வேதனை உருவங் களும் எப்படியோ காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தன.

மீரா, சுரேஷைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண் டினாள். ஆனால் அவன் அதை மறுத்தே வந்தான். "பூவி ழந்து பொட்டிழந்து நீ காட்சி அளிக்கும்போது பூவோடும் பொட்டோடும் ஒருத்தியை இந்த வீட்டிற்கு நான் அழைத்துவர மாட்டேன்!" என்று கூறியே விட்டான். அவன் இதயத்தில் மீரா சம் மதிப்பாளேயானால் அவளையே மணந்து கொள்ளலாம் என்ற ஆசை நிறைந்திருந்தது. ஆனால் அதைக் கேட்க தைரியம் எழ வில்லை.

'கல் மிஷம்' இல்லாமல் அவர் கள் பழகிய போதிலும் வம் பளப்பதையே தொழிலாகக் கொண்ட சிலர் அவர்களைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள்.

அவைகள் எல்லாம் சுரேஷின் காதில் விழ விழ மீராவை எப் படியும் மணந்து கொள்வது என்ற முடிவிற்கு வந்தான். மீரா வின் சம்மதத்தைப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கை அவ னுக்கு நிறைய இருந்தது.

●

அன்று மாலை மிக வேகமாக வீடு திரும்பினான், உள்ளத்தில் தைரியத்தை எல்லாம் தேக்கிக் கொண்டு!

அங்கே.... மீரா இல்லை! கடி தம் ஒன்று அவனுக்குக் காத் திருந்தது.

"அத்தான்!

அத்தான் என்று நான் அழைக்க எனக்கு இன்னும் உரிமை இருக்கிறதென்று நம் புகிறேன். என்னால் உங்கள் வாழ்வே பாழாகி விட்டது... அவச் சொல் உங்களைத் தாக்குவதற்குக் காரண கர்த்தாவாகிய நான் இன் னும் உங்கள் வாழ்வைப் பாழடிக்க விரும்பவில்லை. உங்கள் எண்ணத்தை நான் அறிவேன். ஆனால் இந்த உலகம் அதை ஏற்றுக் கொள்ளாது அத்தான்! நான் திரிந்த பால்! கசங்கிய மலர்! சுவைத்த தேன்! உங்கள் வாழ்வில் நான் களங்கமாக இருக்க விரும்பவில்லை; நான் போகிறேன்! என்னைத் தேடு வதில் காலத்தை வீணாக்கா தீர்கள்—நான் உங்களுக்குக் கிடைக்கவே மாட்டேன்.

அன்பு,
மீரா"

கடிதத்தைப் படித்து முடித்த தும் "ஐயோ, மீரா!" என்றான். அவன் இதயம் வெடித்தது— வேரற்ற மரம்போல் சாய்ந் தான், அருகே இருந்த வீணை யின்மீது! அது நொறுங்கி சுக்கல் சுக்கலாகியது, சுரே ஷின் வாழ்வைப்போல!

பூவிருந்தது; நாரும் இருந் தது; அதைத் தொடுத்து ஆர மாக்கி அழகு பார்க்கத்தான் மனம் இல்லை, ஆசை இல்லை, தைரியம் இல்லை, இந்தப் பாழும் சமுதாயத்திற்கு! ∴

★ பிறைவானம் ★

"இங்கேதான் இருக்கிறேன்..!"

"நான் இங்கேதான் இருக்கிறேன்...சின்ன ஐயா...சின்ன ஐயா...!

"நான்தான் அழைக்கிறேன்...எங்கே போய் விட்டாய் கருப்பா—என்று புலம்பினீர்களே—அந்த அழைத்தை கருப்பன்தான் அழைக்கிறேன்!...

"சாதி இரண்டொழிய வேறில்லை என்ற நீதிக் கருத்து உனக்கும் எனக்குமிடைய ஏன் கருப்பா நெருப்பாகச் சுடுகிறது—என்று வருந்தினீர்களே; உங்கள் கவலையைப் போக்கத்தான் இதோ குதித்திருக்கிறேன், கருப்பன்...

"கண்ணைத் திறவுங்கள் ஐயா! 'தியாகு, தியாகு' என்று உங்களைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு—செல்வத்திலே தாலாட்டிய உங்கள் அப்பா — என்னுடைய 'ஆண்டை' பதறிப் போய் உட்கார்ந்திருக்கிறார்கள்! செய்வதறியாது சிலையாகி விட்டார்கள் அவர்கள்! இன்னும் இமை மூடி எமைச் சித்ரவதை செய்யாதீர்கள் எசமான்!

"கண்களை மூடிக் கொண்டு ஏன் இப்படி கடும் 'தவம்' புரிகிறீர்கள்? யார் குற்றவாளி என்று சிந்திக்கிறீர்களா? இந்த சமூகம் அமைத்திருக்கும் புழுதி படிந்துபோன சட்டப் புத்தகத்தின்படி நான்தான் சாமி குற்றவாளியாம்! ஆண்டையின் மகனிடம் சேவகம்; 'பறையன்' நான் பழகினது குற்றமாம்! உங்களுக்கு வண்டியோட்டி வந்த நான் என் வேலையோடு நின்று விடாமல், விறுகப் பேசியது குற்றமாம்!... வண்டி கவிழ்ந்து நீங்கள் காயமுற்றுக் கிடந்தீர்களே; அப்போது உங்களைத் தொட்டதும், தூக்கியதும், நடத்தியதும், காப்பாற்றியதும்கூட குற்றமாம்!... பொல்லாத குற்றமாம்!... நீங்கள் எதிர்க்கலாம் அதை! ஆனால் அந்தச் சட்டப் புத்தகத்திலே படிந்திருக்கிற புழுதியை அடிக்கடி தட்டிச் சுத்தப் படுத்தி, புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்களே; உங்கள் அப்பா! ஆனால் சின்ன எசமான், ஆந்தச் சட்டப் புத்தகம் இப்படிப் பொல்லாத தீர்ப்பு வழங்குமென்று நான் கண்டேனா?

"பின் நடக்கப் போவதை முன்னறியும் பேராற்றல் அமைச்சர்களின் இலட்சணம் என்பார்கள். ஆனால் இன்று அமைச்சர்களிடையேகூட அதைக் காணமுடியாத போது நான் எம்மாத்திரம் எசமான்? இப்படி ஆகுமென்று தெரிந்திருந்தால் நான் ஓடிப் போவேனா? உங்களைத் தொட்டதற்காக — உங்கள் தந்தை என்னை அடித்தார் என்பதற்காக நான் பதறி ஓடுவேனா? அடியையும், உதையையும், ஆபத்தான நிலையையும் கடந்ததல்லவா, நீங்கள் என்னிடம் காட்டிய பேரன்பு!

"இன்று என்னை அடிப்பார் உங்கள் தந்தை, ஏழை தீண்டத்தகாதவனே, ஏன் என் மகனைத் தொட்டாய்?' என்று! இந்த நிலை நீடித்தால், நானே நீங்களும் உங்கள் தந்தையின் கோபத்தில் சிக்கி விடலாமே...'ஏண்டா குலத்தைக் கெடுக்க வந்த கோடலிக் காம்பே; அந்தப் பறையனைத் தொட்டுத் தொலைத்தாய்?' என்று ஏசக் கூடுமல்லவா, உங்களை? ஆகவேதான் நான் உங்கள் கருணை மிக்க உள்ளத்தை மறந்து...என் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு ஓடியது தவறு என்கிறேன்!

"ஆனால், என் மனம் ஒரு நிலையில் இருந்ததென்று கருதுகிறீர்கள்? தவறு சின்ன ஐயா! 'தாமரை இலைத் தண்ணீர் போல' என்று நான் கேட்டி

ருக்கிறேன்; அதை உள்ள படியே அனுபவித்தேன்!

"நான் நடந்து கொண்டே இருந்தேன், அன்று. எங்கே போகிறேன் என்று எனக்கே தெரியாது. ஆனால 'என்னுடைய கடமை என்ன; நான் என்னதான் செய்ய வேண்டும்' என்று எனக்கு உணர்த்துவதைப் போல எங்கிருந்தோ எழும்பியது ஒரு குரல்...

"உன் கடமை என்னவென்று உணர்ந்தாயா? அதோ பார்—தெரிகிறது உன் இலட்சிய மூகடு! அங்கே நடை போட்டுச் செல்...

"நான் திடுக்கிட்டேன். யார் அது? சுற்று முற்றும் உற்றுப் பார்த்தேன். தூரத்திலிருந்த ஆற்றங்கரை மணல் வெளியில் விளக்கு எரிவது தெரிந்தது. கூட்டமாக மக்கள் அமர்ந்திருப்பதும் புரிந்தது. நான் கண நேரத்தில் யூகித்துக் கொண்டு விட்டேன் — அங்கே பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை!

"அதை விட்டுத் தீய வழி செல்லாதே! நீதிக்குப் புறம்பாக வழக்காடாதே! 'நான் உயர்ந்தவன்; நீ தாழ்ந்தவன்' என்று போராடாதே! அந்தப் போராட்டம் படுகொலைகளுக்கு இலக்காகும்படியும் விட்டுவிடாதே! கேவலம், உலகத்தில் வேறெந்த நாட்டிலும் காண முடியாது தோழனே. சாதிக்குப் போரிட்டு சாவுருக்குப் பானார்கள் அனேகர்—என்ற சோக நிகழ்ச்சி! இங்கேதான் நாம் காணுகிறோம், முதுகுளத்தூர் கொடுமைகளை! அனுமதிக்கலாமா அதை?...

"நான் நின்று விட்டேன். தெளிவாக என் காதுகளில் விழுந்தன, அந்தக் கருத்துரைகள்:

"ஆகவேதான் நாட்டின் நல்ல நெஞ்சு படைத்தவர்கள் வகுத்துக் காட்டும் பாதையிலே செல்லுங்கள் என்கிறோம்...அந்தப் பாதையிலே இன்னல்களும், அல்லல்களும் குறுக்கிடலாம். ஆனால் எல்லையிலேயே இருக்கிறது இலட்சிய மாளிகை! அதிலே சூது வாது என்ற வௌவால்கள் கிடையாது! பொறாமை, பொச்சரிப்பு, சாதிக் கொடுமை போன்ற விஷ வித்துக்கள் எதுவுமே கிடையாது! நமது பயண மெல்லாம் அந்தத் திசையிலேதான் இருக்க வேண்டும்...

"பேச்சாளர் பேசிக் கொண்டே சென்றார். ஆனால் நின்று விட்ட நான் அதற்குப் பின் நீண்ட நேரம்வரை நகரவேயில்லை. அவர் குறிப்பிட்ட இலட்சிய மாளிகைக்குச் செல்ல நான் விரும்பினேன். அங்கேதானே என்மேல் மூடியிருக்கும், 'கீழ்ச் சாதிக்காரச் சிறுவன்' என்ற போர்வை அகற்றப்படும்! ஆனால் சின்ன எசமான், பாதையின் குறுக்கே பயங்கரமாக உறுமிக் கொண்டு நிற்கிறாரே உங்கள் அப்பா! நான் என்ன செய்வேன்— என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன்!

"அதே சிந்தனைதான் சென்ற இரண்டு மூன்று நாட்களாக! கடைசியில்தான் நான் ஒரு முடிவிற்கு வந்தேன். உங்கள் பிரிவால் நான் தவிப்பதைப் போல—என் பிரிவால் நீங்களும் வருந்திக் கொண்டுதான் இருப்பீர்கள்—என்று என் உள்ளத்திலிருந்து ஏதோ ஒரு உணர்வு எடுத்துச் சொல்லியது. அப்போதுதான் நான் உண்மையில் குற்றவாளியானேன்! அப்படித்தான் தீர்ப்பளித்தது என் மனசாட்சி! உங்கள் அப்பாவை நினைத்ததும் எனக்கு பயம் தான் உண்டாகியது; இருந்தாலும் உங்களை ஒருமுறையாவது பார்த்துவிட்டு வரலாமென்று புறப்பட்டேன்! பேச்சாளர் தான் சொன்னாரே; இன்னல்களையும் அல்லல்களையும் கடந்த பின்னர்தான் இலட்சியத்தை அடைய முடியுமென்று!

"இரவு நெருங்கிக் கொண்டிருந்தபோதுதான் நான் என் குடிசைக்குப் பக்கத்தில் வந்தேன். அப்போது நான் கண்ட காட்சி...? எப்படிச் சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. ஆனாலும் நீங்கள் பார்க்காத காட்சியல்லவே அது! உங்கள் அப்பா நெஞ்சிலே ஈரமற்றவர் தான்; ஆனால் அங்கே எரிமலை வெடிக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை! ஆமாம் எசமான்......அப்போதுதான் என் குடிசைக்குத் தீ வைத்துவிட்டு ஓடினார்கள் சில கொடியவர்கள்! தப்பு; தப்பு! கொடியவர்கள் என்றா சொன்னேன்? அவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் எசமானனின் கட்டளையை நிறைவேற்றுகிற அடிமைகள்! அவர்கள் நினைத்துவிட்டார்கள், நான் அந்தக் குடிசையில்தான் படுத்துக் கொண்டிருப்பேன் என்று! குடிசைக்குத் தீ வைத்து என்னைக் கருக்கிவிட்டால், தன் குமரன் 'கருப்பா, கருப்பா' என்று அலறும் நிலை ஏற்படாதே என்பது—சதிப் பித்து பிடித்த தங்களது அப்பாவின் நெஞ்சிலே தோன்றிய அருமையான யோசனை போலும்! ஆனால் நானோ துடி துடிக்கும் நெஞ்சுடன், நடுநடுங்கும் உடலுடன் தூரத்திலே நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் கண்களில் கண்ணீர் ததும்பியது.

"தீ சுடர் விட்டு எரிய ஆரம்பித்தது! அப்போதுதான் நான் சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அங்கே நடந்தது! 'ஐயோ கருப்பா!...கருப்பா!...' என்ற அலறல் திடீரென்று எழும்பியது. கண்களை மூடிக் கொண்டு கட்டிலில் கிடக்கும் சின்ன எசமானே, உங்கள் கால்களுக்கு அத்தனை வலு—பாய்ந்துவரும் கன்றுக்கும் இல்லாத பலம் எப்படித்தான் கிடைத்ததோ—எரிந்து கொண்டிருக்கும் குடிசையை நோக்கிப் பாய்ந்தோடி வந்தீர்கள்! நீங்களும்கூட தவறாக எண்ணி விட்டீர்கள் போலும், நான் குடிசைக்குள்தான் இருக்கிறேன், என்று! ஆனால் நான்

[தொடர்ச்சி பக்கம்—10]

"எங்கே தேடுவேன்...?"

—என்று அலறினான் பண்ணையாரின் செல்வ மகன்!

"இங்கேதான் இருக்கிறேன்...!"

—என்று எதிரிலே வந்து குதித்தான், பண்ணைக் கூலி கருப்பன்!

அவர்கள் இருவருக்குமிடையே இருந்த சாதிக் கொடுமை பயங்கரப் பள்ளமாயிற்று; அது எப்படித் தூர்ந்தது?

எல்லையற்ற தொல்லைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் அப்பாற்பட்டதல்லவா, அவர்கள் இருவருக்குமிடையே நிலவிய அன்பு— அந்த அன்புதான் அடைக்கும் தாழ் இன்றி அவர்களை ஒன்று சேர்த்துவிட்டது!

அந்தோ, தணிக்கை!

★

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி நடித்த 'அவன் அமரன்' படம் தணிக்கையாளர் கத்தரிக் கோலுக்குப் பெரும் பகுதி இரையாகிவிட்டதாம். தொழிலாளரின் குறைகளையும், முதலாளிக் கொடுமைகளையும் சித்தரிக்கும் இந்தப் படத்தை அப்படியே வெளியிட வேண்டுமென்ற முயற்சியில் தயாரிப்பாளர்கள் ஈடுபட்டிருப்பதால் குறித்த நாளில் படம் வெளிவர இயலவில்லை என்று தெரிகிறது.

எதிர்ப்பதால் என்ன பலன்? எல்லாம் 'அவர்கள்' செயலன்றோ!

'சதி' நடக்கிறதாம்!

சேலத்திலே அலுமினியத் தொழிற்சாலை அமைவதைத் தடுப்பதற்காக வடநாட்டவர்கள்தான் 'சதி' நடத்துகிறார்கள்!

இந்தக் குற்றச் சாட்டை நாம் மட்டும் சொல்லவில்லை. 'வடக்கு—தெற்கு பேதம் கற்பித்து, நாட்டிலே குழப்பத்திற்கு வித்திடுகிறவர்களின் அரசியல் புரட்டு அது' என்று மேடைதோறும் முழங்கி வருகின்ற நமது 'கனம்'களின் கேளா காதுகளின் செவிப்பறை கிழியுமளவுக்கு இப்படி உணர்த்தியிருப்பது யார தெரியுமா?

அந்த அமைச்சர்களின் வரிசையிலேயே அமர்ந்திருப்பவர்களில ஒருவர்தான் இந்தக் காலம் தாழ்ந்த கண்டு பிடிப்பை வேதனையோடு வெளிப்படுத்தி இருக்கிறார்!

அலட்சியம்; ஆணவப் போக்கு; புறக்கணிப்பு; ஓர வஞ்சனை; மதியாத தன்மை; மாற்றாந்தாய் மனப் பண்பு—என்றெல்லாம் அழைக்கப்படுகிற வடக்கத்தி அரசின் வஞ்சக செயல்களுக்கு இப்போது 'சதி' என்ற புதிய—பொருத்தமான மகுடமிடுகிறார் அமைச்சர்!

இப்படி ஒரு தகவலை சென்னை தொழிலமைச்சர் கனம் வெங்கட்ராமன் தெரிவித்ததாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது!

சேலத்திலே அலுமினியத் தொழிற்சாலையை அமைக்கப் போவதாக இன்றல்ல; ரொம்ப நாட்களாகப் பேசி வருகிறார்கள்!

திடீரென்று அதிலே ஒரு திருப்பம் ஏற்பட்டது!

வழக்கமாக தென்னகத்திலே அமுலாக்கப்படுவதாக இருக்கும் திட்டமொன்று தள்ளி வைக்கப்பட்டால்; அல்லது கைவிடப்பட்டால் அதற்கு வெளி நாட்டு நாணயச் செலாவணிக் கட்டுப்பாட்டைக் காரணம் காட்டுவார்கள்!

ஆனால் இந்த முறை சேலத்து அலுமினியம் தரக் குறைவானது—என்று குற்றம் காட்டினார்கள்.

என் தெரியுமா?

அப்போதுதான் சேலத்திலே அலுமினியத் தொழிற்சாலை அமைவதைத் தடுக்கலாம் என்பதற்காக மட்டுமல்ல; அப்போதுதான் பம்பாய் மாநிலத்தில் கோலாப்பூரிலே இது போன்றதொரு தொழிற்சாலையை வேகமாகக் கட்ட முடியும் என்பதற்காக!

பாவம்; இதிலும் தோற்று விட்டார்கள், சூழ்ச்சிக்காரர்கள்!

சேலத்திலே கிடைக்கும் அலுமினியம் தரக் குறைவானது என்றும்; அளவும் அதிகமல்ல என்றும் நிபுணர்கள் கூறியதாக வதந்தி கிளப்பிவிட்டார்கள்!

—அது தவறு என்று மிகவும் துணிவுடன் மறுத்திருக்கிறார், அமைச்சர்.

சேலம் மாவட்டத்திலே அலுமினியம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு 17 ஆண்டுகள் ஆகின்றன!

அங்கு கிடைக்கும் தாதுப் பொருள் ஆறரை மில்லியன் டன்களாகும்.

இவற்றுள் பெரும் பகுதியில் ஐம்பது சதவீதம் அலுமினியம் இருக்கிறது.

சேலத்தில் கிடைக்கும் இந்த அலுமினியத் தாதுப் பொருளின் முக்கிய விசேஷம் என்னவென்றால் அவற்றுள் 95 சதவீதம் மற்றவைகளைவிட மிகவும் எளிதில் காஸ்டிக் சோடாவில் கரையும் தன்மை கொண்டவை.

—இந்தத் தன்மையும்; அதன் இதர குணநலன்களும் சேலத்து அலுமினியத்தின் சிறப்புகளுக்குக் காரணங்களாக அமைகின்றன.

—இப்படியெல்லாம் நிபுணர்கள் அபிப்பிராயம் கூறியிருப்பதை எடுத்துக் காட்டி; பம்பாய் மாநிலத்தோரின் வீண் வதந்தியை மறுத்திருக்கிறார், அமைச்சர்!

—அமைச்சர் வெங்கட்ராமன் இவ்வளவு துணிவுபெற்றிருப்பதற்காகப் பாராட்டப்பட வேண்டியவர்தான்!

இந்தத் துணிவுமட்டுமே விரைவில் சேலத்திலே அலுமினியத் தொழிற்சாலையை அமைத்துவிடும் என்று கூறிவிட முடியாது.

'எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவன் இருக்கிறானே' என்பார்கள், வைதீகர்கள்!

தென்னகத்தின் பொருளாதார ஏற்றத்தைப் பொருத்த வரையிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

அதற்காகத்தான் நிபுணர்கள் மாறாக அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாக வீண் வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள்!

—இதை அமைச்சர் மறுத்திருக்கிறார்!

மறுத்தவர் சென்னை மாநிலமென்கிற 'பெரிய முனிசிபாலிட்டி'யின் அமைச்சர்!

எனவே அவரது மறுப்புக்கு அவ்வளவு மதிப்பு இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது!

எல்லாவற்றிற்கும் மேலாக; சர்வ வல்லமை பெற்று; சர்வ வியாபியாக இருக்கிறது டெல்லி மத்திய அரசாங்கம்!

பம்பாயிலுள்ள கோலாப்பூரிலே ஒரு அலுமினியத் தொழிற்சாலை அமையவேண்டும்!

அதற்கு பலி சேலத்திலே அமையப்போகும் தொழிற்சாலை!

—வடக்கத்தியர்களின் மனப் போக்கு இந்தப் பின்னணியிலே இயங்கிக்கொண்டிருக்கிறது!

சேலத்திலே தொழிற்சாலை கூடாது என்பதற்காக வதந்தி கிளப்பி விடுபவர்கள் நாளை வேறு காரணம் காட்டி அதைத் தடுக்க மாட்டார்கள் என்று யார் கூறமுடியும்?

ஏகபாரதத் தத்துவத்திலே இங்கிருப்பவர்களுக்கு நம்பிக்கையிருக்கிறவரை நிலைமை இப்படியேதான் இருக்கும்; 'வெங்கடராமன்கள்' எவ்வளவுதான் கூக்குரல் போட்டாலும் அது மாறவே மாறாது!

★ ★ ★

முரசொலி சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

திசை எட்டும் புகழ் பரப்பும் தீந்தமிழ்க் கருவூலம்...

முத்தாரம்

மார்ச் இதழில்....

புலவர் குழந்தை

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

கே. ஏ. மதியழகன்

பேராசிரியர் வேதகிரி சண்முகசுந்தரம்

கவிஞர் வாணிதாசன்

ஆகியோரின் கருத்தோவியங்கள் இடம் பெறுகின்றன!

பிருந்தாவனம்

முல்லை சத்தி எழுதியிருக்கும் பெருங் கதை — வாழ்க்கையின் படப் பிடிப்பு!

தென்பாண்டித் துறைமுகம்

தென்னகம் வடவர்களால் புறக்கணிக்கப் படுகிறது என்பதற்கு நாம் காட்டும் ஆயிரமாயிரம் ஆதாரங்களில் ஒன்று!

தென் : துருவம்

உயிர் இனமே வசிக்காத பனி மண்டலத்திலே வெற்றிப் பவனி வந்த மனித சக்தியின் பேராற்றலை விளக்கும் அற்புதக் கட்டுரை!

இத்தனையும் உண்டு — முத்தனைய இன்னும் பல எழுத்தோவியங்களும் உண்டு!

...சிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவருமான மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட ரோடு, தமிழ்நாடு, சென்னை-6